

# விமோசனம்

ஒரு மாதப் பத்திரிகை

| தொகுதி | ஆசிரியர்: | பகுதி |
|---|---|---|
| 1 | சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரி | 5 |

சுக்ல-வருஷ

## மார்கழி

புதுப்பாளையம்

காந்தி ஆசிரமம்,

திருச்செங்கோடு.

வருஷ சந்தா தபாற்கூலி உள்பட ரூபாய் ஒன்று.

தனிப்பிரதி அணா ஒன்று, தபாற்கூலி வேறு.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| ராவணன் (படம்) | ... | ... | 161 |
| அபிப்பிராயம் கேட்டல் | ... | ... | 162 |
| புது இன்ஸ்பெக்டர் | ... | ... | 164 |
| ஒப்பிட்டுப் பாருங்கள் | ... | ... | 172 |
| மதுபானச் செலவும் மற்றச் செலவும் (படம்) | | ... | 17 |
| இருபதுகோடி | ... | ... | 174 |
| கள்ளின் அளவு (படம்) | ... | ... | 175 |
| ஸ்தல ஸ்தாபனங்கள் | ... | ... | 176 |
| ஆப்பிரிக்காவின் கோரிக்கை | ... | ... | 177 |
| களைப்பு நீங்கவழி | ... | ... | 179 |
| ஜில்லாவாரி மதுபானக் கணக்கு | ... | ... | 180 |
| வினாவிடை | ... | ... | 182 |
| ஆறுமுகத்தின் முடிவு | ... | ... | 188 |
| கடற்கரைக் கிளிஞ்சல் | ... | ... | 196 |


இந்த மாதப்பத்திரிகை வேண்டுவோர் ரூ. 1—0—0 வருஷ சந்தா தொகையுடன் "விமோசனம்" காரியதரிசி, காந்தி ஆசிரமம், திருச்செங்கோடு என்ற விலாசத்திற்கு எழுதிப் பதிவுசெய்து கொள்ளலாம். அயல் நாட்டுக்கு அதிக தபாற்கூலி 0—2—0 சேர்த்து அனுப்பவேண்டும். தனிப் பிரதி எல்லாக் காதி வஸ்திராலயங்களிலும் மற்ற விடங்களிலும் பெறலாம். விலை அணா ஒன்று. தபாலில் எழுதிப்பெற்றால் தபாற்கூலி சேர்த்து 0—1—6.

# விமோசனம்

| தொகுதி 1 | சுக்ல௵ மார்கழி௴ | பகுதி 5 |
| --- | --- | --- |



நாட்டின் சீதேவியைக் கவர்ந்துகொண்டு போய்ச் சிறையில் வைத்திருக்கிறன் மது சாரமென்னும் இராவணன். இவனுக்குத் தென்னங்கள்ளு, பனங்கள்ளு, பீர், சாராயம், ஒயின், வுஸ்கி, பிராந்தி, அபினி, கஞ்சா, என்னும் பத்துத் தலைகள் உண்டு. இக்கொடிய அரக்கனைத் தொலைக்கும் போரில் எல்லாரும் துணைபுரியுங்கள்.

---

# அபிப்பிராயம் கேட்டல்

இங்கிலாந்து முதலிய மேல் நாடுகளில் மதுபானக் கடைகள் இருக்கவேண்டும் என்று சொல்லுபவர்கள் ஒவ்வொரு ஊரிலும் அநேகம் பேர் இருப்பார்கள். வோட்டு எடுத்தால் "வேண்டாம்" என்பவர்களைப் போலவே "வேண்டும்" என்பவர்களும் திரள் திரளாயிருப்பார்கள். நம்முடைய நாட்டில் அவ்விதம் கிடையாது. மதுபானக் கடைகள் இருந்தால் நலம் என்று நினைப்பவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். குடிப்பழக்க முள்ளவர்களும் மது பானத்தில் ஆசையுள்ளவர்களுங்கூடக் கடைகள் இல்லாமலிருப்பதே க்ஷேமம் என்று அறிந்து அபிப்பிராயப் படுகிறார்கள். ஆயிரத்துக்கு ஒருவர் வேறுவிதமாய் அபிப்பிராயப் பட்டாலும் அதை வெளியே சொல்ல வெட்கப் படுவார்கள். பொது அபிப்பிராயம் இவ்வாறிருக்கிற ஒரு நாட்டில், கடைகளை மூடிவிடலாமா வேண்டாமா வென்று வோட்டு எடுத்துப் பார்க்கலாமென்பது அறியாமை அல்லது ஏமாற்றலாகும். இதைத்தான், மேல் நாட்டு மனோபாவங்களுடன் வேலை செய்துவரும் சர்க்காருக்கு மகாத்மா காந்தி அடிக்கடி சொல்லுகிறார். "உங்கள் ஊர் நடவடிக்கை வேறு, இந்திய மனோபாவம் வேறு. இங்கே கள்ளும் சாராயமும் இருக்கவேண்டும் என்று சொல்லுபவர் யாருமில்லை. இந்தப் பாழுங்கடைகளை உடனே மூடிவிடுங்கள்; இதற்காக யாரையும் கேட்க வேண்டியதில்லை" என்று சொல்லுகிறார்.

சென்ற மாதத்தில் சென்னை கலால் இலாகா தலைவரும் ரிவினியூ போர்டு மெம்பருமான காட்டரல் துரை திருச்செங்கோடு தாலுகாவிற்கு வந்திருந்தார். கள்ளுக்கடைகளுக்குப்போய்

அங்கே குடிப்பதற்காகக் கூடியிருந்த ஜனங்களையே கேட்டுப் பார்த்தார். "கடைகளை எடுத்துவிடுங்கள்; நாங்கள் பிழைப்போம்" என்று திரள் திரளான குடியர்களே அவரிடம் சொன்னார்கள். அவரும் குறித்துக்கொண்டு போயிருக்கிறார். கடைகளை மூடிவிட்டால் தங்களுடைய வியாபாரம் நஷ்டமடையும் என்று பயப்படும் கள்ளுக்கடை ஏலதார்களுங்கூட முன்வந்து கடைகள் இருக்கவேண்டும் என்று வற்புறுத்தவில்லை. அவர்களும் இந்திய நாட்டின் தருமத்திற்கு உடன்பட்டவர்களானபடியால் சும்மா இருந்தார்கள்.

அனுவசியமாய் வோட்டு எடுக்கவும் அபிப்பிராயம் கேட்கவும் ஆரம்பிப்பது தவறாகும். வோட்டு என்றால் பிரசாரம்; பிரசாரம் என்றால் எதிர்ப்பிரசாரம்; பிறகு கட்சிவாதம், லஞ்சம், ஆள்சேர்த்தல். பல தவறான முறைகளைக் கட்சிகளில் கைக்கொள்ளுவார்கள். அபிப்பிராய பேதம் இருக்கக்கூடிய விஷயங்களில் கேட்கவேண்டியது அவசியமே. நல்ல விஷயத்தில் யாதொரு அபிப்பிராய பேதமுமில்லாத ஒரு தேசத்தில் வீணாய் அபிப்பிராயபேதத்தை உண்டாக்குவது தவறான முறையாகும். திருட்டு, கொள்ளை, கொலை இவைகளை ஒழிக்கவும், தெருக்களை சுத்தமாக வைக்கவும், குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லித்தரவும் ஜனங்களுடைய அபிப்பிராயம் கேட்டா அரசாங்கம் நடவடிக்கை நடத்துவது? இந்தியாவில் குடியை ஒழிக்க யாரையும் கேட்கவேண்டியதில்லை. இவ்விஷயத்தில் செய்யவேண்டியதைச் செய்தால் யாரும் ஆக்ஷேபிக்கமாட்டார்கள்.

---

# புது இன்ஸ்பெக்டர்

[க. ச.]

## I

[தென்னாற்காடு ஜில்லா மடச்சேரி காளியாப்பிள்ளை கலால் கண்டிராக்டில் வெகுநாள் அநுபவமுள்ளவர். தற்போது நாலு கள்ளுக்கடையும், இரண்டு சாராயக்கடையும் ஏலத்தில் எடுத்திருக்கிறார். அவர் வீட்டுத் திண்ணையில் இப்பொழுது உட்கார்ந்து தாம்பூலம் பூட்டுக் கொண்டிருப்பவர் புது கலால் சப் இன்ஸ்பெக்டர் ராஜவேலு முதலியார். காளியாப்பிள்ளையும், கலால் சேவகர்களும் பக்கத்தில் நிற்கிறார்கள்.]

ராஜவேலு முதலியார்: நீங்கள் செய்த உபசாரத்திற்காக மிக்க வந்தனம். ஆனால் இவ்வளவு ஏற்பாடு செய்திருக்க வேண்டியதில்லை. ஏன் நிற்கிறீர், காளியாப்பிள்ளை! உட்காரும். வந்த காரியம் கொஞ்சம் பார்ப்போம். நீர் நான்கு சந்துக்கடை * வைத்து நடத்துவதாய்த் தகவல் கிடைத்திருக்கிறது. இது உண்மைதானா?

காளியாப்பிள்ளை: எஜமானுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை.

ராஜ: போனது போகட்டும். இனிமேல் இதையெல்லாம் நிறுத்தி விடவேண்டும். நான் வேலை ஒப்புக்கொண்டு ஒரு வாரந்தான் ஆகிறது. இதற்குள் நடவடிக்கை எடுத்துக்கொள்ள இஷ்டமில்லை. கூடியவரை சிநேக பாவமாய் வேலைசெய்ய வேண்டுமென்று பார்க்கிறேன். ஆனால் சட்டப்படி நடக்கவேண்டும். இது வெறும் பேச்சல்ல. கண்டிப்பாய்ச் சொல்கிறேன். அப்புறம் என்மேல் மனஸ்தாபப் படக்கூடாது. ஜாக்கிரதை.

காளி: எஜமான் உத்திரவிற்கு நான் என்ன பதில் சொல்கிறது?

ராஜ: என் உத்திரவு ஒன்றுமில்லை, காளியாப்பிள்ளை! சட்டப்படி நடக்கவேண்டும், அவ்வளவுதான். ஆப்காரி சட்டம் தம்மிடம் இருக்கிறதல்லவா?

காளி: ஆகா! இருக்கிறது.

ராஜ: அதை முழுதும் படித்திருக்கிறீரா?

---

* கள்ளு அல்லது சாராயக்கடை ஏலம் எடுத்தவன் சட்டவிரோதமாய் வேறிடங்களில் சிறு சிறு கிளைக்கடைகள் வைத்து விற்பதுண்டு. இந்தக் கிளைக் கடைகளுக்குச் சந்துக்கடைகள் என்று பெயர் வழங்கும்.

காளி : ஏதோ கொஞ்சம் பார்த்திருக்கிறேன்.

ராஜ : சரி ; அதிலுள்ளதை நானும் சொல்கிறேன், கேளுங்கள். கடைக்கு வெளியில் எந்தக் காரணத்தைக் கொண்டும் சரக்கு விற்கக் கூடாது. காலை $9\frac{1}{2}$-மணிக்கு முன் கடை திறக்கக் கூடாது. இராத்திரி 8-மணிக்கு மூடிவிடவேண்டும். கடனுக்கு விற்கக்கூடாது. ஸ்திரீகளுக்கும் 18 வயதுக்குட்பட்ட மைனர்களுக்கும் விற்கக்கூடாது. மோட்டார் ஓட்டுபவர்களுக்கும், போலீஸ்காரர்களுக்கும் 'டியூடி'யிலிருக்கும் போது விற்கக்கூடாது. பழைய குற்றவாளிகளுக்கும், ஏற்கனவே போதை கொண்டிருப்பவர்களுக்கும், பைத்தியம் பிடித்தவர்களுக்கும் விற்கக்கூடாது. இந்த நிபந்தனைகளை யெல்லாம் கண்டிப்பாய் அநுசரிக்கவேண்டும். தவறினால் நிச்சயமாய் நடவடிக்கை எடுத்துக் கொள்வேன். இதில் கொஞ்சம்கூட சந்தேகம் வேண்டாம். தெரிகிறதா ?

காளி : தெரிகிறது, எஜமான் ! ஆனால் என் வயிற்றிலும் அடிக்கக் கூடாது. ஏழையும் பிழைக்கவேண்டும். வழக்கத்திற்கு மேல் போகாமல் கூடியவரை நடந்துகொள்கிறேன். எஜமானும் எங்களைக் காப்பாற்ற வேண்டும்.

[தட்டில் நூறு ரூபாய் நோட்டை வைத்து இன்ஸ்பெக்டரிடம் கொடுக்கிறார்.]

ராஜ : என்ன காளியாப்பிள்ளை, இது ? நான் சொல்வது புரியவில்லையா உமக்கு ? என்னைப் பார்த்தால் லஞ்சம் வாங்குகிறவனைப்போலிருக்கிறதா ?

சேவகன் : என்ன ஐயா ! ஒன்றும் பேசாமல் 'திடும்' என்று பணத்தை நீட்டுகிறீரே !

காளி : எஜமான் கோபித்துக் கொள்ளக்கூடாது. என் மாமூலை நான் செய்ய வேண்டியது தானே ? இதற்குமேல் எனக்கு சக்தியில்லை. ரொம்ப நஷ்டப் பட்டிருக்கிறேன்.

ராஜ : பணத்தை எடுத்து வைத்துக்கொள்ளும், ஓய் ! இந்த மாமூல்களெல்லாம் எனக்கு வேண்டாம். இப்பொழுதாவது தெரிந்ததா, நான் சொன்னது விளையாட்டல்ல வென்று ?

காளி : எஜமான் தயவு வைத்து என்னுடைய கஷ்டத்தையும் கொஞ்சம் எண்ணிப்பார்த்தால் நன்றாயிருக்கும்.

ராஜ : உமக்கென்ன கஷ்டம் வந்தது ? அதெல்லாம் எனக்கு அக்கறையில்லை. 'ரூல்'படி நடத்தித்தான் ஆகவேண்டும்.

காளி (சேவகனைப் பார்த்து) : நீங்களாவது சொல்லுங்கள், ஐயா ! 'ரூல்ஸை'யே கவனித்துக் கொண்டிருந்தால் வருஷம் 2000 ரூபாய் எப்படிக் கந்தாயம் கட்டமுடியும் ?

சேவகன்: பிள்ளைக்கு ரொம்ப நஷ்டந்தான். இரண்டு மூன்று வருஷமாய் லாபமே கிடையாது.

ராஜீ: அப்படியானால் ஏங்காணும் ஏலம் எடுக்கவேண்டும்?

காளி: எல்லாம் கலெக்டர் ஐயாவும், இன்ஸ்பெக்டர் துரையும் செய்ததுதான். ஏலத்தைத் தூக்கிவிட்டு என்னை எடுக்கத் தூண்டினார்கள். இப்படியாகுமென்று தெரிந்தால் ஒருநாளும் எடுத்திருக்கமாட்டேன். அந்த ரத்தினம் பிள்ளைக்கே விட்டிருப்பேன்.

ராஜ: மற்றவர்கள் செய்தி என்னிடம் சொல்லவேண்டாம். சட்டத்துக்கு விரோதமாய்ச் சம்பாதிக்கலாமென்று கடை எடுத்திருந்தால் அது உம்முடைய தவறுதான். இந்த சமாதானம் என்னிடம் சொல்லிப் பயனில்லை. நடவடிக்கை நடத்தித்தான் தீருவேன். சந்துக்கடை கூடவே கூடாது. எச்சரிக்கை செய்துவிட்டேன். அப்புறம் விடமாட்டேன், ஜாக்கிரதை! போய்வருகிறேன்.

[இன்ஸ்பெக்டர் புறப்பட்டுப் போகிறார். காளியாப் பிள்ளை திகைத்து நிற்கிறார்.]

*　　　*　　　*　　　*

## 2

[மடச்சேரி சாராயக்கடை. காலை $9\frac{1}{2}$மணி. இன்னும் கடை திறக்கவில்லை. பழனி ஒட்டனும் கோபால சக்கிலியும் வாசலில் பேசிக்கொண்டு நிற்கிறார்கள்.]

பழனி: என்ன, கோபாலு! இந்தக் கூத்தை இத்தனை காலமாய்க் கண்டதுண்டா? இந்நேரமாயும் கடைதிறக்க வில்லையே?

கோபாலன்: நாமும் 20 வருஷமாய்க் குடித்துவருகிறோம். இந்த அதிசயம் பார்த்தது கிடையாது.

பழனி: என் இப்படி மூடிக்கிடக்கிறது? உனக்கேதாவது தெரியுமா?

கோபாலன்: ஊரில் ஏதோ சொல்லிக்கொள்கிறார்கள். புதுசாய் வந்திருக்கும் இன்ஸ்பெக்டர் சண்டை பிடித்தாராம்? ரூல்ஸ்படி நடக்க வேண்டுமோம். இத்தனைகாலம் இல்லாத ரூல்ஸ் இப்போது என்ன வந்ததோ தெரியவில்லை.

பழனி: ரூல்ஸாவது, கீல்ஸாவது, கோபாலு? கடைக்காரன் பேராசை தான். துரைக்குக் கொடுக்கவேண்டியது கொடுத்துவிட்டால் கண்ணை மூடிக்கொண்டு போகிறான். இவனே எல்லாவற்றையும் வாயில் போட்டுக்கொள்ளணும் என்றால், துரை சும்மாவிடுவானா?

கோபாலன் : அவர்கள்பாடு அவர்களுக்கு. எப்படியாவது போகட்டும். நமக்கல்லவா தொந்திரவாயிருக்கிறது? இன்றைக்கு ஒருவேளை கூலி போச்சே!

[கதவு திறக்கிறது. காளியாப்பிள்ளை உள்ளிருந்து வருகிறார்.]

பழனி : என்ன, ஐயா! இது அடுக்குமா? கூலிசெய்து பிழைக்கிறவர்களை இப்படிக் காக்கப்போடலாமா? பொழுதுவிடிந்தது முதல் காத்துக் கிடக்கிறோமே?

காளி : நான் என்ன செய்யலாம், அப்பா? காலம் கெட்டுப் போச்சு. புது இன்ஸ்பெக்டர் ஒருவன் வந்திருக்கிறான். தடபுடல் பண்ணுகிறான். சட்டப்படி நடக்காவிட்டால் பிடித்து ஜெயிலில் போடுவானும். இல்லாமற்போனால் கடைமூடுவேனா? எனக்கில்லையா அந்த அக்கறை?

கோபாலன் : என்? அவருக்குச் சேரவேண்டிய மாமூலைக் கொடுத்துவிடுகிறது தானே?

பழனி : எங்களிடம் கொள்ளை யடிக்கிறாயே, அந்த லாபத்தில் அவருக்கும் கொஞ்சம் வாய்க்கரிசி போட்டால் முழுகியாபோகும்?

காளி : ரொம்ப லாபத்தைக் கண்டாய், படவா! மாமூல் கொடுக்கவில்லையா? முழுநோட்டாய்க் கொடுத்தேன். வேண்டாமாம்! வரும்படி வாங்குவதில்லையாம். சந்துக் கடையெல்லாம் மூடிவிட வேண்டுமென்று கண்டிப்பாய் உத்திரவு போட்டிருக்கிறார்.

பழனி : எல்லாம் அப்படித்தான் சொல்வார்கள். பத்து ரூபாய் சேர்த்துக்கொடுத்தால் வாயைத் திறப்பார்.

காளி : அப்படியில்லை, பழனி! ரூபாய் நூறு கொடுத்தேன். சேவகன்கூடச் சொல்லிப்பார்த்தான். வேண்டாமென்று போய்விட்டார்.

கோபாலு : எ, சாமி! இப்படியும் உண்டா? காலம் கலிகாலம். அது எப்படியேனும் போகிறது, எங்களுக்கு ஊத்தச்சொல்லுங்கள்.

காளி : எங்கே? பணத்தை எடுங்கள்.

[இருவரும் திடுக்கிட்டுப்பார்க்கிறார்கள்.]

பழனி : என்ன, ஐயா, பரிகாசம் பண்ணுகிறீர்? காலை நேரத்தில் எங்களிடம் காசுபணம் ஏது?

கோபாலு : பொழுது போகத்தான் சம்பாதித்த கூலி முழுதும் கொடுத்து விடுகிறோமே? இப்போதென்ன பணம்?

காளி : கடனுக்குச் சரக்கு விற்கக் கூடாதென்று சட்டம். நான் என்ன செய்யலாம்? இனிமேல் கடன் கணக்கே வைக்கமுடியாது.

பழனி: கணக்கு எழுதவேண்டாமே. சாயங்காலம் கொடுத்து விடுகிறோம். இன்றைக்குப் புதிதா? இருபது வருஷமாய்த் தெரியாதா?

கோபாலு: மோசமா செய்து விடுவோம்?

காளி: அந்தப்பாவி மத்தியானம் வந்து பிடித்துக்கொண்டால் என்ன செய்வேன்? கொடுக்க முடியாதப்பா!

[மோட்டார் சத்தம். பஸ் வந்து வாசலில் நிற்கிறது. டிரைவர் அவசரமாய் இறங்கி வருகிறான்.]

டிரைவர்: ஐயா! ஒரு டிராம். ஜல்தி. இராத்திரி தூக்கமேயில்லை. உடம்பெல்லாம் வலிக்கிறது.

காளி: உங்களுக்குச் சாராயம் கொடுக்கக் கூடாது. சட்டத்துக்கு விரோதம்.

டிரைவர்: என்ன, ஐயா! விளையாடுகிறீர்? இன்றைக்குப் புதிதாய்ச் சட்டம் வந்துவிட்டதா? சீக்கிரம் கொண்டு வா. போகவேண்டும்.

காளி: சட்டம் புதிதாய் வரவில்லை. துரைதான் புதிதாக வந்திருக்கிறார். அவர் கண்டிப்பாய் உத்திரவு போட்டிருக்கிறார். இல்லாவிட்டால் கொடுக்கமாட்டேனென்பேனா? எனக்குத்தானே நஷ்டம்?

டிரைவர்: முடியாதா?

காளி: முடியாது.

டிரைவர்: சரி, முன்னால் பார்த்துக் கொள்கிறேன். இந்தக்கடைதானா அதிசயம்?

[டிரைவர் பஸ்ஸை ஓட்டிக்கொண்டு போய்விடுகிறான். பையன் ஒருவன் வருகிறான்.]

பையன்: எஜமான் ஒருபுட்டி வாங்கிவரச் சொன்னார்.

காளி: நீ மைனர். உனக்குக் கொடுக்கமாட்டேன்.

பையன்: நானா குடிக்கிறேன்? எஜமானுக்குத் தானே? கொடு, ஐயா!

காளி: முடியாது. புது துரை வந்திருக்கிறார். கையில் பணம் இருக்கிறதா?

பையன்: பணமா? கணக்கு வைத்துக்கொள்ளும். இது என்ன இன்றைக்குப் புதிசா?

காளி: கிடையாது, போ! பணத்துடன் பெரிய ஆள் வரச் சொல்லு.

[பையன் போகிறான்.]

காளி (தனக்குத்தானே): இப்படியானால் நான் என்ன வியாபாரம் செய்து வாழ்கிறது?

[போலீஸ்காரன் ஒருவன் வருகிறான்.]

போலீஸ்: பிள்ளை! விடிய விடிய நடந்துவந்தேன். அவசரக் கடிதமாம். இந்த ஐயன் எப்போதும் இப்படித்தான் வதைக்கிறான்.

காளி: ஐயோ! பாவம்! சர்க்கார் சேவகமே கஷ்டந்தான்.

போலீஸ்: ரொம்ப களைப்பாயிருக்கிறது, ஒரு டிராம் போடு.

காளி: ஐயோ! அதுகூடாது. புதிய சால்ட் இன்ஸ்பெக்டர் வெகு கடுமை. போலீஸ்காரருக்குச் சாராயம் விற்கக் கூடாதென்று உத்திரவு.

போலீஸ்: என்ன, ரொம்ப சட்டமெல்லாம் பேசுகிறாயே?

காளி: ஆமாம். புது துரை வெகு கண்டிப்பாயிருக்கிறார். என்ன செய்யலாம்?

போலீஸ்காரன் போகிறான். கொஞ்சம் நேரம் காத்திருந்துவிட்டுக் கோபால சக்கிலியும் போய்விடுகிறான்.]

பழனி: ஐயா! ஒரு டிராமாவது கொடுக்காவிட்டால் செத்துப் போய் விடுவேன்.

காளி: எவ்வளவு தடவை சொல்கிறது? கொஞ்சநாள் சும்மாயிரு. இந்தத் துரை போகட்டும். எத்தனை நாள் இருக்கப்போகிறார்?

பழனி: துரை கிடக்கிறான். நீ போடு ஐயா! இவனை ஒழிக்க எத்தனைநேரம் செல்லும்?

காளி: சீச்சீ! இப்படியெல்லாம் பேசாதே. யார் காதிலாவது விழப்போகிறது. அடே சாமுண்டி! இவனுக்கு ஒரு டிராம் ஊத்து.

பழனி (குடித்துவிட்டு): நீ பார்த்துக்கொண்டேயிரு. இந்தப் போக்கிரிப் பையனை ஒரு நொடியில் தொலைக்கிறேன்.

காளி: முட்டாள், சத்தம் போடாதே.

பழனி: சும்மாயிருக்கட்டும். இன்னும் ஒரு டிராம் போடு. என் கைவரிசை காட்டுகிறேன்.

காளி: அடே சாமுண்டி! இன்னும் அரை டிராம் ஊத்தப்பா!

[பழனி அதைவாங்கிக் குடித்துவிட்டு ஆவேசத்துடன் போகிறான்.]

* * * *

## 3

[ஜில்லா வைத்தியசாலை. சால்ட் சப்இன்ஸ்பெக்டர் ராஜ வேலுப்பிள்ளை படுக்கையில் படுத்திருக்கிறார். கையில் காயம். கட்டுப் போட்டிருக்கிறது. அஸிஸ்டெண்ட் கமிஷனர் நடேசய்யர், வயது சுமார் 52, பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறார்.]

அஸி. கமி: நல்லவேளையாய்ப் போயிற்று, ராஜவேலுப்பிள்ளை! இந்தமட்டும் தப்பிவிட்டீர். என்ன நடந்தது, விவரமாய்ச் சொல்லுங்கள்.

ராஜ: நேற்று மத்தியானம் சாப்பிட்டானதும் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்தேன். கிழவன் ஒருவன் "இன்ஸ்பெக்டர் வீடு எது?" என்று கூச்சலிட்டுக்கொண்டு வந்தான். நன்றாய்க் குடித்திருந்தான். அவனைக் கூப்பிட்டு என்ன காரியமென்று கேட்டேன். கிட்ட வந்து மடியிலிருந்து திடீரென்று கத்தி எடுத்து ஓங்கிக் குத்தினான். மார்பில் குத்தியது நல்லவேளையாய்த் தவறிக் கையில் பட்டது.

அஸி. கமி: அவன் குடித்திருந்ததும் நல்லதாய்ப் போயிற்று. காரணம் ஒன்றும் புலப்படவில்லையே? நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ராஜ: மடச்சேரி காளியாப்பிள்ளை வேலையாகத்தான் இருக்க வேண்டும். இவன் அந்த ஊர்க்காரன் தான்.

அஸி. கமி: நானும் அப்படித்தான் முதலில் சந்தேகப் பட்டேன். ஆனால் போலீஸ் விசாரணையில் வேறுவிதமாய்ச் சாக்ஷி கொடுத்திருக்கிறார்கள். காளியாப்பிள்ளை இவனுக்குச் சாராயங் கொடுக்கக் கண்டிப்பாய் மறுத்து விட்டானாமே?

ராஜ: இதெல்லாம் நமக்குத் தெரியாதா? எனக்கு சந்தேகமே கிடையாது. சந்துக் கடைகளை நிறுத்திவிடச் சொன்னேன். நூறு ரூபாய் நோட்டு கொடுத்தான். வீசி முகத்தில் எறிந்தேன். எதாவது விஷமம் செய்வானென்றுதான் நினைத்தேன். ஆனால் இவ்வளவு சீக்கிரம் செய்வானென்று எண்ணவில்லை.

அஸி. கமி: என் இவ்வளவு ஆத்திரப்பட்டு வேலை செய்தீர்கள்? கொஞ்சம் நிதானம் வேண்டாமா? எங்களை ஒருவார்த்தை கேட்கக் கூடாதா?

ராஜ: கடமையைத்தானே செய்தேன்? சட்ட விரோதமான காரியத்தைப் பார்த்துக் கொண்டிருக்கலாமா?

அஸி. கமி: வாஸ்தவந்தான். ஆனால் கால தேச வர்த்தமானத்தையும் கொஞ்சம் கவனித்துக் கொள்ளவேண்டும். நாம் தானே எலத்தைத் தூக்கி விடுகிறோம்? சட்டப்படி எல்லாம் நடந்தால் கண்டி

ராக்டர்கள் எப்படிக் கிஸ்து கட்டி லாபம் சம்பாதிக்கமுடியும்? இதெல்லாம் வெறும் பேச்சு.

ராஜ: என்ன இப்படிச் சொல்கிறீர்கள்? எப்படியாவது குடியை விருத்திசெய்து பணம் சம்பாதிப்பது தான் சர்க்கார் நோக்கமா?

அஸி. கமி: நீங்கள் சிறுவயது, உலகந்தெரியாமல் பேசுகிறீர்கள். குடிகாரன் எப்படியாவது குடிக்கத்தான் போகிறான்.

ராஜ: கிராமந்தோறும் சந்துக்கடை வைப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பதா?

அஸி. கமி: இந்த யோசனை யெல்லாம் நமக்கெதற்காக? நம்முடைய வேலையை யல்லவா நாம் கவனிக்கவேண்டும்?

ராஜ: என்னதான் நம்முடைய வேலை?

அஸி. கமி: சர்க்கார் வருமானத்தை விருத்தி செய்யவேண்டியது முதல்காரியம். பிறகு, பகிரங்கமாய்ச் சட்ட விரோதம் நடவாமல் பார்த்துக் கொள்ளவேண்டியது. டிபார்ட்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் ஒற்றுமையாய் வேலை செய்யவேண்டியது.

ராஜ: பொதுஜன நன்மையைப் பற்றி நாம் கவனிக்கவே வேண்டாமா?

அஸி. கமி: ஒவ்வொருவரும் தன் தன்வேலையைக் கவனித்தால் பொது நன்மை தானே கூடிவருகிறது.

ராஜ: குடியை விருத்தி செய்வதற்கு நான் உடன்படமாட்டேன். இந்த வேலையை ராஜீனமா செய்யவேண்டியதுதான்.

அஸி. கமி: உமக்கு வயது 22 தான் ஆகிறது. உலகாநுபவம் போதாது. அவசரப்பட்டு ஒன்றும் செய்யாதீர்கள். பின்னால் வருத்தப்பட வேண்டிவரும். நான் போய்வருகிறேன்.

---

குடிகாரன்:—சர்க்கார் இந்தப் பாழுங் கள்ளுக்கடைகளை யெல்லாம் மூடிவிடமாட்டார்களா?

மகன்:—ஒரு பெரிய கள்ளுக்கடையை மூடுவது நம்முடைய கையிலிருக்கிறது, அப்பா! அதை மூடிவிட்டால் பூரண மதுவிலக்கு தானாகவே உண்டாகும்.

குடிகாரன்:—அப்படியா? அது எந்தக் கடை?

குழந்தை:—அது உன் மூக்குக்குக் கீழே இருக்கிறது.

தகப்பன்:—போக்கிரிப் பயலே!

---

# ஒப்பிட்டுப் பாருங்கள்

சென்னை மாகாணத்தில் குடிக்காகவும், மற்றபோதை வஸ்துக்களுக்காகவும் ஒரே ஒரு வருஷத்தில் ஜனங்கள் மொத்தம் எவ்வளவு பணம் செலவழிக்கிறார்கள், உங்களுக்குத் தெரியுமா? பின்வரும் 1928-29-ம் வருஷக் கணக்கைக் கவனியுங்கள்:—

| மதுவகை | காலன் | குடிகாரன் கொடுத்த கிரயம் |
|---|---|---|
| கள்ளு | 15,00,00,000 | ரூ. 12,75,00,000 |
| பீர் | 9,88,000 | 8,00,000 |
| சாராயம் வுஸ்கி முதலியன | 26,86,000 | 3,22,00,000 |
| அபினி, கஞ்சா வகையரா | 1,67,900 (ராத்தல்) | 78,00,000 |
| ஆக மொத்தம் கள்ளு சாராயம் அபினி வகையராவுக்காக ஒரு வருஷத்தில் ஜனங்கள் போடும் பணம் குறைந்த பட்சம் | ... | ...ரூ. 16,83,00,000 |
| இதில் சர்க்கார் அடையும் பங்கு | ... ... | 5,10,00,000 |
| பாக்கி அநியாயமாய் வீணாகும் தொகை | ... | $11\frac{3}{4}$கோடி. |

* * * *

இத்துடன் பின்வரும் கணக்கை ஒப்பிட்டுப் பாருங்கள்:—

| | |
|---|---|
| மொத்தம் சென்னை சர்க்காரின் நிலவரி வருமானம்... | $7\frac{1}{2}$ கோடி. |
| சென்னை சர்க்காரின் பொது நிர்வாகச் செலவு ... | $2\frac{1}{2}$ கோடி. |
| கோர்ட்டு முதலிய நீதிபரிபாலனச் செலவு ... | 1 கோடி. |
| போலீஸ் செலவு ... ... | 2 கோடி. |
| கல்வி யிலாகா செலவு ... ... | $2\frac{1}{2}$ கோடி. |
| ஆஸ்பத்திரிகளும் சுகாதாரமும் ... ... | $1\frac{1}{2}$ கோடி. |
| பஞ்ச நிவாரணம் ... ... ... | 7 லட்சம். |

ஜனங்களின் கல்விக்கும் சுகாதாரத்துக்கும் செலவழியும் தொகை 4 கோடி ரூபாய்க்கும் குறைவு! கள்ளு சாராயத்தில் அநியாயமாய்ப் போகும் பணம் $11\frac{3}{4}$ கோடி ரூபாய். இப்பொழுது சொல்லுங்கள், மது விலக்கு வேண்டுமா? வேண்டாமா?

## சென்னை மாகாணத்தில்
## மது பானச்செலவும் மற்ற செலவும்




தொகைக்குத் தக்கபடி கோடுகளின் உயரம் காட்டப்பட்டிருக்கிறது. மதுபானச் செலவிற்குப் பக்கத்தில் மற்ற தொகைகள் எவ்வளவு சிறியவையாகக் காணப்படுகிறது பாருங்கள்.

# இருபது கோடி!

மதுபான வகைகளில் ஏழைகளுக்கு யமனுயிருப்பது கள்ளு. பெரும்பாலும் ஏழையிலும் ஏழையான ஜனங்களே கள்ளுக்குடித்து அழிகிறார்கள். இவர்கள் மொத்தம் வருஷத்தில் எவ்வளவு கள்ளுக் குடிக்கிறார்கள், அதற்காக எவ்வளவு பணம் செலவழிக்கிறார்கள் என்னுங் கணக்கு சர்க்கார் அறிக்கைகளில் காணப்படுவதில்லை. சர்க்கார் மனது வைத்தால் இந்தக் கணக்கு வெகு சுலபமாய்க் கண்டு பிடிக்கலாம். கள்ளுக் கடை ஒவ்வொன்றிலும், இவ்வளவு கள்ளு இன்னவிலைக்கு விற்கப்பட்டது என்று கணக்கு வைக்கும்படி உத்திரவிடலாம். வருஷத்தில் 50 லட்சம் ரூபாய் விழுங்கும் கலால் இலாகாவுக்கு இந்த ஏற்பாட்டை நடத்திவைப்பது கஷ்டமாகாது. ஆனால் சர்க்கார் இதுவரையில் இந்தக் கணக்கு எடுக்க எவ்வித முயற்சியும் செய்யவில்லை. இனிமேலேனும் செய்வார்களாவென்று பார்க்கலாம்.

சர்க்கார் கணக்குத் தராவிட்டாலும், கள்ளில் மொத்தம் செலவாகும் பணத்தை நாம் ஒருவாறு மதிப்பிடக் கூடும். மொத்தம் கள்ளுக்கட்டப்பெற்ற மரங்களுக்கு சர்க்கார் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். இதிலிருந்து கள்ளு செலவாகும் அளவையும், அதற்குப்போடும் பணத்தையும் மதிப்பிடலாம்.

சென்னை மாகாணத்தில் தென்னை, பனை முதலிய எல்லா வகை மரங்களும் சேர்ந்து மொத்தம் $26\frac{1}{4}$ லட்சம் மரம் கள்ளுக் கட்டப் பட்டதாக சர்க்கார் அறிக்கையில் காணப்படுகிறது.

கள்ளு உற்பத்தி மரத்துக்கு மரம் வித்தியாசப் படுமாயினும், சராசரி ஒரு மரத்தில் மாதம் 6 காலன் கள்ளுக்குக் குறையாமல் உற்பத்தியாகுமென்று நிச்சயமாய் வைத்துக் கொள்ளலாம். இதன்படி மாதத்தில் 1,27,50,000 காலன் கள்ளும் வருஷத்தில் 15,00,00,000 காலன் கள்ளும் குறைந்தது செலவாகிறதென்று ஏற்படுகிறது.

கள்ளின் விலையிலும் காலத்தையும், இடத்தையும் உத்தேசித்து மாறுபாடுகள் உண்டாயினும், சராசரி காலன் 14 அணுவுக்குக் குறையாது. ஆகவே சென்னை மாகாணத்தில் கள்ளுக்காக மட்டும் வருஷத்தில் குறைந்தது 13 கோடி ரூபாய் செலவாகிறது! கூலிவேலை செய்வோர் முதலிய ஏழையிலும் ஏழையான ஜனங்களே இவ்வளவு பணமும் கொடுக்கிறார்கள்!

மேற் காட்டியது குறைந்தபட்சக் கணக்கு. சென்னை முதலிய பெரிய நகரங்களில் விலை இதைவிட மிகவும் அதிகம். தஞ்சாவூர் ஜில்லா போன்ற இடங்களில் ஜனங்கள் நெல்லைக்கொடுத்துக் கள்ளு வாங்குகிறார்கள். கடைக்காரன் நெல் விலையையும் குறைத்து அளவிலும் அதிகமாய் வாங்குவது சகஜம். ஆகவே ஏழைகள் இருமடங்கு விலை கொடுக்கிறார்கள்.

எனவே வருஷத்தில் 13 கோடிக்குக் குறையாமல் 20 கோடி ரூபாய் வரையில் நமது சென்னை மாகாணத்தில் ஏழைகள் கள்ளுக்காகச் செலவழிக்கிறார்கள் என்று ஏற்படுகிறது. இந்தப் பெருந் தொகையில் சர்க்கார் அடையும் வரித்தொகை $2\frac{1}{2}$ கோடி ரூபாய் தான். சர்க்கார் $2\frac{1}{2}$ கோடி ரூபாய் அடைவதற்காக ஏழைகளுக்கு 20 கோடி ரூபாய் தண்டம் வைக்கும் முறையை புத்தியுள்ள எவனாவது ஆதரிக்க முடியுமா?

இருபது கோடி ரூபாய் தொலைப்பதற்குப் பதிலாக ஜனங்கள் அடையும் நன்மை என்ன? துன்மார்க்க மிகுதி, குற்றங்களின் பெருக்கம், நோய் நோக்காடுகள் முதலியவைதான். ஜனங்கள் அறிவு மழுங்கி, முன்னேற்ற முயற்சி எதற்கும் தகுதியற்றவர்களாவது தான். இந்த இருபது கோடி ரூபாயும் உபயோகமான தொழில்களில் போட்டால் ஜனங்கள் எவ்வளவு லாபமடைவார்கள்? தேசத்தில் செல்வம் வளர்ந்து குடிகள் எவ்வளவு சுகமாய் வாழலாம்?

கள்ளு வரி தர்மத்துக்கு விரோதம்; நீதிக்கு விரோதம். அது அறிவுடைமையு மன்று. மகத்தான பொருள் நஷ்டத்துக்குக் காரணமாயிருப்பது. ஆகவே கள்ளை யொழிப்பது மிகச் சிறந்த தேசீய பொருளாதார திட்டமாகும்.




மூன்று மாகாணங்களில் செலவாகும் கள்ளின் அளவைக் காட்டும் படம். கோடுகளின் உயரம் கள்ளின் அளவுக்குத் தக்கபடி வரையப் பட்டிருக்கிறது.

# ஸ்தல ஸ்தாபனங்களின் ஆதரவு

அகில் இந்திய மதுவிலக்குச் சங்கத்தின் காரியதரிசி கேட்டுக் கொண்டதின் மேல், சென்னை மாகாணத்திலுள்ள பல ஸ்தல ஸ்தாபனங்கள் மதுவிலக்கை ஆதரித்துப் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றன :—

"மதுபானம் பெருகி வருவதால் எற்படும் தீமைகளிலிருந்து தேசத்தை விடுதலை செய்வதற்கு மதுபானக் கடைகள் எல்லாவற்றையும் மூடி விடுதல் அவசியமென்று இந்த சபை அபிப்பிராயப் படுகிறது. இந்தத் தாலூகாவிலுள்ள ஜனங்களில் மிகப் பெரும்பான்மையோர் குடியை உடனே தொலைத்து விடவேண்டுமென்று ஆவலுடையவர்களாயிருப்பதால், இத்தாலூகாவிலுள்ள மதுபானக் கடைகள் எல்லாவற்றையும் மூடிவிட உத்திரவிடுமாறு இந்த சபை அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது. பூரண மதுவிலக்குச் செய்வதற்கான எல்லாச் சட்டங்களையும் உத்திரவுகளையும் அமுலுக்குக் கொண்டுவருவதற்கும், திருட்டுத்தனமான மதுவியாபாரத்தைத் தடுப்பதற்கும் எல்லா வகையிலும் உதவி செய்வதற்கு இந்த போர்டார் தயாராயிருக்கிறார்கள்."

இதுவரையில் மேற் கண்டபடி தீர்மானம் நிறைவேற்றி யிருக்கும் ஸ்தல ஸ்தாபனங்கள் வருமாறு:

மன்னார்குடி, நன்னிலம், நாமக்கல், பீமாவரம், குளித்தலை, மாயவரம், சேரமாதேவி, தர்மபுரி, விருத்தாசலம், தனுக்கு, பொன்னாணி, திருப்பத்தூர், உசிலம்பட்டி, தேவகோட்டை, ஆத்மகூர் — தாலூகா போர்டுகள்.

விஜயநகரம், பாலக்காடு, திருப்பத்தூர், மாயவரம், சித்தூர், ஹிந்துபூர், மன்னார்குடி—நகர சபைகள்.

மேற்கு கோதாவரி ஜில்லா போர்டார் மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றி யிருப்பதுடன், அந்த ஜில்லாவிலுள்ள தாலூகா போர்டுகளுக்கெல்லாம் தீர்மானத்தின் நகல் அனுப்பி எல்லாரையும் அத்தகைய தீர்மானம் செய்யும்படி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

அநேகமாக மேற்படி போர்டுகள், நகர சபைகள் எல்லாம் ஆட்சேபமின்றி ஏகமனதாய் மதுவிலக்குத் தீர்மானம் நிறைவேற்றி யிருப்பது குறிப்பிடத் தக்கது.

மேற் கண்டவை யல்லாமல் கும்பகோணம், ஸ்ரீரங்கம் நகர சபைகளும், காஸர்கோட், நரசராவ் பேட்டை தாலூகா போர்டுகளும் மதுவிலக்கை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றி யிருக்கின்றன.

இன்னும் இம்மாகாணத்திலுள்ள தாலூகா போர்டுகள், ஜில்லா போர்டுகளும், நகர சபைகளும் இத்தகைய தீர்மானம் நிறைவேற்றி இந்தப் பெரிய தொண்டிற்கு ஆதரவு அளிக்குமென்று எதிர் பார்க்கிறோம். பிரதிநிதிகள் அசட்டைகாட்டு மிடங்களில் அவர்கள் தங்கள் கடமையைச் செய்யுமாறு ஜனங்களே முன்வந்து வற்புறுத்த வேண்டும்.

# ஆப்பிரிக்காவின் கோரிக்கை

மேற் காப்பிரிக்காவிலுள்ள ஆக்கரா நகரத்து பிஷப் பாதிரியார் லண்டன் "டைம்ஸ்" பத்திரிகையில் உருக்கமான ஒரு வேண்டுகோள் வெளியிட்டிருக்கிறார். மேற் காப்பிரிக்காவில் உடனே பூரண மதுவிலக்குச் சட்டம் செய்ய வேண்டுமென்பது அவருடைய கோரிக்கை. மதுபானத்தினால் மேற் காப்பிரிக்காவிலுள்ள சுதேசிகள் அழிந்து வருவதைப்பற்றி அவர் எடுத்துக்கூறி "இந்தத் துயரக் காட்சியைப் பார்க்கும்போது இருதயம் வெடித்துவிடும் போல் துக்கம் உண்டாகிறது" என்று சொல்கிறார்.

மேலே அவர் எழுதியிருப்பதின் சாராம்சமாவது:—"மதுபான இறக்குமதியை அடியோடு தடுத்துவிட வேண்டுமென்று இந்நாட்டின் சுதேசித் தலைவர்கள் எல்லாம் ஒரு முகமாய்க் கோருகிறார்கள். இத்தலைவர்களில் ஒருவரான ஸர் ஆபாரி அட்டா என்பவர் சமீபத்தில் இங்கிலாந்துக்குப் போய்வந்தார். அங்கே அவருக்குச் சிலர் மதுப்பீப்பாய் ஒன்றைப் பரிசளித்தார்களாம். அவர் ஜன்மதேசத்துக்குத் திரும்பி வந்ததும் 'மதுவினால்தான் என் நாடு அழிகிறது' என்று சொல்லி அப்பீப்பாயைத் தூக்கிக் கடலில் எறிந்துவிட்டார். இது ஆப்பிரிக்கா முழுவதிலும் ஒரு பெரிய கிளர்ச்சி உண்டு பண்ணியிருக்கிறது. எழுதப்படிக்கத் தெரிந்த ஆப்பிரிக்கர் எல்லாரும் மதுபானம் ஒழிய வேண்டுமென்றே சொல்கிறார்கள். இதில் அபிப்பிராய பேதமே அவர்களுக்குள் இல்லை. ஆயினும் அரசாங்கத்தார் இந்த ஒரு முகமான கோரிக்கையை மறுத்து மதுவிற்பனைக்கு லைஸென்ஸு கொடுத்து வருகிறார்கள். என்?

"முதலாவதாக, சாராய இறக்குமதி வரியின் மூலம் அரசாங்கத்துக்கு 8 லட்சம் பவுன் வருமானம் வந்து கொண்டிருக்கிறது. மதுவிலக்குச் செய்தால் இந்த வருமானம் போய் விடுமென்றும், அதனால் கல்வி, வைத்தியம், சுகாதாரம், சாலை போடுதல் முதலியவைகளுக்குப் பணம் குறைந்து விடுமென்றும் சொல்கிறார்கள். ஆப்பிரிக்க சுதேசிகளின் நன்மைக்காகவே அரசு புரிவதாகச் சொல்லும் அரசாங்கத்தார் இத்தகைய காரணம் சொல்வது கொஞ்சமும் தகுதியன்று. வேறு வருமான மூலங்களைத் தேடிக் கண்டு பிடிப்பது அரசாங்கத்தின் கடமை. குடி ஒழிந்தால் சுதேசிகளுக்கு 25 லட்சம் பவுன் மீதியாகுமாகையால், அவர்களே பொதுச் செலவுக்கு வரிகொடுக்கவும் முன்வருவார்கள்.

"அரசாங்கத்தார் சொல்லும் மற்றொரு காரணம் யாதெனில், மதுவிலக்குச் சட்டத்தை நடத்தி வைக்கமுடியாது, திருட்டுத்தனமாய் மது உற்பத்தி செய்வதும், விற்பதும் அதிகமாய்விடும் என்பது. இந் நாட்டில் போலீஸ் நிர்வாகம் திறமையாக நடத்தி வருவோர் இந்தக் காரணத்தை ஒப்புக்கொள்ள மாட்டார்களென்று நான் உறுதியாய்ச் சொல்வேன்.

"இந்த தேசத்தை நன்கறிந்துள்ள நாங்கள் மதுவிலக்கு ஏற்பட்டே தீர வேண்டுமென உறுதி கொண்டிருக்கிறோம். அரசாங்கத்தார் பெருந் தன்மையுடன் இந்த நியாயமான கோரிக்கையை உடனே நிறைவேற்றி வைக்கப் போகிறார்களா வென்பதுதான் கேள்வி. அப்படிச் செய்தால் அவர்களுக்குப் பெருமை. பலமான கிளர்ச்சி ஏற்பட்ட பிறகு வலுக்கட் கட்டாயத்தின்மேல் நிறைவேற்றி வைப்பது நல்லரசாங்கத்துக்கு அழகன்று."

---

## "விமோசனம்" நேயர்களுக்கு

"விமோசனம்" பத்திரிகைக்குச் சித்திரப் படங்கள் எழுதிக் கொடுத்து வந்த ஸ்ரீமான் தாமோதரம் செட்டியார் அவர்கள் சென்ற மாதக் கடைசியில் தேக அசௌக்கியமுற்றுச் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை செய்தும் பயனின்றிக் காலஞ் சென்ற செய்தியை மிக்க துக்கத்தோடு தெரிவித்துக்கொள்கிறோம். ஸ்ரீமான் செட்டியார் சுமார் 24 வயதேயான இளைஞர். நமது பத்திரிகையில் வெளியான சித்திரப்படங்களில் அவருடைய அரிய சித்திரத் திறமையைக் கண்டு மகிழ்ந்து வந்த நமது நேயர்களெல்லாம் நம்மைப் போலவே அவருடைய அகால மரணத்துக்காக வருந்துவார்களென்று நம்புகிறோம்.

---

# களைப்பு நீங்க வழி

"மதுபானமும் மனித வாழ்க்கையும்" என்ற பெயருடன் டாக்டர் கோர்ட்னி வீக்ஸ் (எம். ஆர். சி. எஸ்., எல். ஆர். சி. பி.) என்னும் பிரபல வைத்தியர் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அதில் அவர் சொல்வதாவது :—

"மதுபானத்தினால் களைப்பு நீங்குமென்பது முற்றும் தவறான எண்ணம். மது களைப்பைப் போக்குவதில்லை; கொஞ்ச நேரம் களைப்புத் தோன்றாமல் செய்கிறது. வலியின் காரணத்தை அது நீக்குவதில்லை; சிறிது நேரத்துக்கு வலிதெரியாமல் செய்கிறது" என்கிறார்.

இப்படி அறிவை மயக்கிக்கொண்டு களைப்புத் தோன்றாமல் செய்து கொள்வது நல்லதா என்று யோசிக்கவேண்டும். களைப்பு என்பது என்ன? உடம்பு அதிகமாக உழைத்தால் அதன்பயனாக இரத்தத்தில் விஷ அணுக்கள் சேர்கின்றன. இந்த விஷ அணுக்களை வெளியே தள்ள இரத்தம் முயற்சி செய்யும்போதுதான் உடம்பில் களைப்பும் வலியும் தோன்றுகின்றன. இவை தெரியாமலிருப்பதற்காகக் குடித்துப் போதை கொள்வது, இயற்கை வேலையைத் தடை செய்வதேயாகும்.

இதுமட்டுமன்று. ஆரம்பத்தில் கொஞ்சமாகக் குடித்தாலும் உணர்ச்சி மழுங்கி வலி தோன்றாமலிருக்கும். நாளாக ஆக, மேலும் மேலும் அதிகமாய்க் குடித்தால் தான் இந்தப்பயன் உண்டாகும். முடிவில் அறிவு அடியோடு கெட்டு உடல் உணர்ச்சியும் அற்றுப் போய்விடும். சொற்ப நேரம் களைப்புத் தெரியாமல் இருப்பதற்காக, இப்படி உடம்பையும், அறிவையும், ஆத்மாவையும் அடியோடு பாழாக்கிக் கொள்வது நல்லதா என்று சிந்தித்துப் பாருங்கள்.

அப்படியானால், களைப்புத் தீர்வதற்கு சரியான வழிதான் என்ன? மூளை சிகிச்சையில் பெயர் பெற்ற ஸர் மாரிஸ் கிரெக் என்பவர் சொல்கிறார் :—

"நன்றாய்த் தூங்குங்கள். தசை நார்களின் களைப்பைப் போக்கிப் புதிய பலம் தரும் அருமருந்து தூக்கமேயாகும். இதற்கு மதுவின் உதவியைத் தேடவேண்டாம். மதுபானத்தினால் உண்டாவது மயக்கம்; அது தூக்கமன்று. இந்த மயக்கம் விளைவதற்குங்கூட நாளுக்கு நாள் குடியின் அளவை அதிகரிக்க நேரிடும்."

உழைத்து வேலைசெய்யும் தொழிலாளிகள் நல்லுணவு அருந்தித் தூய காற்றுள்ள இடத்தில் படுத்துத் தூங்கவேண்டும். களைப்பு நீங்குவதற்கு இதைவிடச் சிறந்த உபாயம் வேறுகிடையாது.

# 1928-29-ம் வருஷத்து

| ஜில்லா. | சீமைச் சரக்குக் கடைகள் | சாராயக் கடைகள் | கள்ளுக் கடைகள் | அபினிக் கடைகள் | கஞ்சாக் கடைகள் | விற்ற சாராயம் (காலன்) | சாராயம் விற்ற விலை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| கஞ்சம் ... | 7 | 234 | 161 | 56 | 34 | 105025 | 839814 |
| விசாகப்பட்டினம் | | | | | | 2880 | 3456 } |
| ஷை ... | 16 | 129 | 205 | 95 | 26 | 92811 | 799019 } |
| கீழ் கோதாவரி ... | | | | | | 51656 | 103320 } |
| ஷை ... | 17 | 209 | 360 | 96 | 22 | 102996 | 818009 } |
| மேல் கோதாவரி... | 5 | 135 | 277 | 30 | 7 | 86935 | 647166 |
| கிருஷ்ணு ... | | | | | | 1947 | 15180 } |
| ஷை ... | 7 | 270 | 449 | 28 | 10 | 137549 | 1129695 } |
| குண்டூர் ... | 9 | 305 | 296 | 25 | 22 | 98816 | 867105 |
| நெல்லூர் ... | 6 | 204 | 329 | 16 | 18 | 51941 | 435917 |
| கடப்பை ... | 3 | 256 | 279 | 10 | 15 | 99131 | 733619 |
| அனந்தப்பூர் ... | 12 | 248 | 556 | 11 | 18 | 69706 | 543708 |
| பல்லாரி ... | 9 | 185 | 365 | 7 | 27 | 73590 | 570757 |
| கர்நூல் ... | 5 | 184 | 417 | 25 | 22 | 107818 | 880143 |
| சென்னை ... | 111 | 19 | 46 | 4 | 5 | 178233 | 1360571 |
| செங்கற்பட்டு ... | 34 | 161 | 347 | 4 | 10 | 25129 | 210330 } |
| ஷை ... | | | | | | 79031 | 508365 } |
| சித்தூர் ... | 5 | 194 | 321 | 13 | 13 | 57095 | 378069 |
| வட ஆற்காடு ... | 15 | 276 | 429 | 11 | 16 | 166206 | 1139421 |
| தென் ஆற்காடு ... | 9 | 462 | 305 | 11 | 15 | 193281 | 1576325 |
| தஞ்சாவூர் ... | 23 | 93 | 1086 | 16 | 18 | 68739 | 474125 |
| திருச்சிணுப்பள்ளி | 16 | 217 | 247 | 9 | 10 | 107587 | 760495 |
| மதுரை ... | 20 | 163 | 193 | 10 | 20 | 68358 | 518076 |
| ராமணுதபுரம் ... | 8 | 167 | 502 | 13 | 17 | 39490 | 321353 |
| திருநெல்வேலி ... | 13 | 214 | 453 | 11 | 15 | 73068 | 523332 |
| கோயமுத்தூர் ... | 37 | 334 | 562 | 16 | 25 | 102390 | 829845 |
| நீலகிரி ... | 48 | 4 | | 4 | 3 | 18495 | 195835 |
| சேலம் ... | 15 | 271 | 493 | 9 | 14 | 70702 | 493548 |
| தென் கன்னடம் ... | 7 | 344 | 596 | 6 | 19 | 88242 | 534735 |
| மலையாளம் ... | 45 | 438 | 992 | 23 | 32 | 96741 | 714300 |
| மேட்டூர் ... | 1 | 5 | 17 | | | 1980 | 15444 |
| ஆகமொத்தம் | 503 | 5721 | 10283 | 559 | 453 | 2517568 | 18941077 |
| சென்றவருஷத்திய மொத்தம். | | 5738 | 10375 | 560 | 440 | 2264965 | |

# ஜில்லாவாரி மதுபானக் கணக்கு

| வுஸ்கி பிராந்தி வகை (காலன்) | ஜயின் (காலன்) | பீர் (காலன்) | அபினி (சேர்) | கஞ்சா (சேர்) | பங்கி (சேர்) | அபினி, கஞ்சா, பங்கி விற்ற விலை | ஜில்லா. |
|---|---|---|---|---|---|---|---|
| 1288 | 217 | 1383 | 4745 | 3532 | 239 | 8,99,715 | ... கஞ்சம் |
| 4662 | 562 | 6055 | 7137½ | 1922 | 24 | 9,05,815 | விசாகப்பட்டினம் |
| 11362 | 507 | 2995 | 8585½ | 1239 | 6 | 10,39,009 | ... கீழ் கோதாவரி |
| 2727 | 102 | 463 | 2956½ | 863 | 143 | 4,57,763 | ...மேல் கோதாவரி |
| 2597 | 211 | 4772 | 1133 | 1004 | | 2,20,652 | ... கிருஷ்ணு |
| 2317 | 193 | 1458 | 1299 | 1691 | 16 | 3,36,148 | ... குண்டூர் |
| 1044 | 82 | 1862 | 548½ | 1208 | 3 | 1,26,310 | ... நெல்லூர் |
| 462 | 45 | 561 | 243 | 2328 | 8 | 1,49.677 | ... கடப்பை |
| 1432 | 194 | 3499 | 131½ | 1293 | 25 | 83,573 | ... அனந்தப்பூர் |
| 2115 | 294 | 15700 | 81½ | 1984 | 12 | 1,10,013 | ... பல்லாரி |
| 1583 | 59 | 1337 | 399½ | 2207 | 3 | 1,76,741 | ... கர்நூல் |
| 62973 | 10879 | 518837 | 1309½ | 3288 | 1327 | 3,74,270 | ... சென்னை |
| 1728 | 113 | 55838 | 157½ | 920 | 244 | 68,903 | ... செங்கற்பட்டு |
| 572 | 49 | 915 | 289 | 1436 | 189 | 1,10,278 | ... சித்தூர் |
| 1962 | 212 | 9130 | 515½ | 1344 | 30 | 1,50,972 | ... வட ஆற்காடு |
| 902 | 181 | 7511 | 268½ | 677 | 59 | 91,364 | ... தென் ஆற்காடு |
| 3764 | 827 | 20797 | 1003 | 1387 | 74 | 2,45.041 | ... தஞ்சாவூர் |
| 3916 | 1040 | 22763 | 354 | 1045 | 43 | 1,02,563 | திருச்சினுப்பள்ளி |
| 7626 | 1109 | 29967 | 612½ | 2529 | 1679 | 2,99,028 | ... மதுரை |
| 968 | 126 | 1975 | 359½ | 1773 | 70 | 1,74,340 | ... ராமநாதபுரம் |
| 3310 | 732 | 4331 | 780 | 2260 | 15 | 2,83,340 | ... திருநெல்வேலி |
| 7048 | 1357 | 45858 | 617½ | 2203 | 262 | 1,96,958 | ... கோயமுத்தூர் |
| 12641 | 3345 | 196661 | 277 | 74 | 1 | 41,950 | ... நீலகிரி |
| 1147 | 167 | 4859 | 362½ | 1503 | 1729 | 1,39,435 | ... சேலம் |
| 1505 | 932 | 2626 | 116½ | 1148 | | 73,943 | ... தென் கந்நடம் |
| 6326 | 2300 | 23287 | 903 | 1683 | 24 | 2,33,899 | ... மலையாளம் |
| | | 2376 | | | | | ... மேட்டூர் |
| 147977 | 25835 | 987816 | 35186 | 42541 | 6225 | 70,91,700 | ஆகமொத்தம் |
| 138462 | 27593 | 763220 | 34639½ | 40129 | 5626 | | சென்றவருஷத்திய மொத்தம் |

# மதுவிலக்கு வினா விடை

## 5

வினா:—குடியினால் அறிவு நஷ்டம் உண்டாவதாகச் சொன்னீர்க ளல்லவா? அது எப்படி?

விடை:—இதைப்பற்றிச் சந்தேகம் ஏற்படவே நியாயமில்லை. பிரத்தியட்சப் பிரமாணத்தினால் அறியலாம். சுயபுத்தியுட னிருக்கும் போது ஒருகாலும் செய்யத் துணியாத காரியங்களைக் குடி மயக்கத்தி லிருக்கும்போது செய்வார்கள். அரையில் ஆடையில்லாமல் கிடந்து புரளுவார்கள். வாயில் வந்ததைப் பிதற்றுவார்கள். இவை அறிவுள்ள வர்கள் செய்யும் காரியமா?

வினா:—ஆனால் போதை யிருக்கும்போது தானே இந்தவிதமாக அவர்கள் அறிவை யிழந்திருக்கிறார்கள்? போதை தெளிந்ததும் எப்போ தும் போல் நல்லறிவு பெறுகிறார்களல்லவா?

விடை:—இது தவறான எண்ணம். குடியினால் நாளடைவில் அறிவு நிரந்தரமாகவே மழுங்கிவிடுகிறது. தெளிவாகச் சிந்திக்கும் சக்தி குடி காரர்களுக்கிராது. பகுத்தறிவு போய்விடும். பலருக்குப் பைத்தியமே பிடித்து விடுகிறது.

வினா:—இதற்கு ருசு உண்டா?

விடை:—சர்க்காரால் நடத்தப்படும் பைத்தியக்கார வைத்திய சாலைகளில் கணக்குப்பார்த்தால் பாதிப்பேருக்குமேல் குடியினால் பைத்தியம் பிடித்தவர்களா யிருக்கிறார்கள். பைத்தியக்காரர்களின் பரா மரிப்புக்காக இங்கிலாந்தில் ஒரு பெரிய பஞ்சாயத்து ஏற்பட்டிருந்தது. பதினாறு வருஷகாலம் இந்தப் பஞ்சாயத்தின் தலைவராயிருந்த லார்ட் ஷாப்ட்ஸ்பரி என்பவர் "பைத்திய சாலைகளுக்கு வரும் 100 பேரில் 60 பேர் குடியினாலேயே அங்கு வருகிறார்கள்" என்று கூறியிருக்கிறார்.

வினா:—ஆனால் இதெல்லாம் பெருங் குடிகாரர்களுக்குத் தானே? சொற்பமாய்க் குடிப்பவர்களுக்கு அறிவு நஷ்டம் உண்டாகிறதில்லை யல்லவா?

விடை:—தவறு; ஒருவனுடைய அறிவை மழுங்கச்செய்வதற்கு ஆறு துளி மதுஸாரம் போதுமானது. மேலும், சொற்பமாய்க் குடிக்கத் தொடங்குபவர்கள் எல்லாரும் கடைசியில் பெருங் குடிகாரர்களாய்த் தான் முடிகிறார்கள்.

* * * *

## 6

வினு :—கடைசியாக, மதுபானத்தினுல் ஆத்ம நலத்துக்கும் தீமை விளைகிறதென்று சொன்னீர்களல்லவா? அது எப்படி?

விடை :—மோட்ச சாதன முயற்சிகள் எல்லாவற்றிற்கும் அடிப் படை நல்லொழுக்கமே. துன்மார்க்கனுடைய தெய்வ பக்தி வெறும் வேஷந்தான். அதைக் கடவுள் ஒப்புக்கொள்ளமாட்டார். கள்ளு துன் மார்க்கங்களுக்கெல்லாம் மூல காரணமாயிருப்பதால், கட்குடியன் இறை வன் அருளைப் பெறுதல் அரிது.

வினு :—உலகிலுள்ள சமயங்களெல்லாம் இதைப்பற்றி என்ன சொல்கின்றன?

விடை :—எல்லாச் சமயங்களும் மதுபானத்தை மறுத்திருக்கின் றன. குடியை ஆதரிக்கும் மதம் நாகரிக மக்களுக்குள் கிடையாது.

வினு :—ஹிந்து தருமம் என்ன சொல்கிறது?

விடை :—மனுஸ்மிருதி குடிகாரர்களுக்குப் பலமான தண்டனை களை விதித்திருக்கிறது. தமிழ் மறையாகிய திருக்குறளில் குடியின் தீமைகளைப்பற்றித் தனியாக ஓர் அதிகாரம் இருக்கிறது. புராணங்களில் குடியின் தீமைகளை விளக்கும் பல கதைகள் இருக்கின்றன.

வினு :—அவற்றில் ஒன்றைச் சொல்லுங்கள்.

விடை :—ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் உறவினர்களான யாதவர் களின் அழிவைக் குறித்து பாகவதத்தில் ஒரு கதை இருக்கிறது. இவர் கள் மகாபராக்கிரம சாலிகளாய் எவராலும் வெல்லமுடியாதவர்களா யிருந்தார்கள். கடைசியாக அவர்கள் கள் ளருந்தி போதைகொண்டு அந்த வெறியில் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு இறந்தொழிந் தார்கள். இவ்வாறு ஒரு பெரிய வம்சமே நிர்மூலமாயிற்று.

வினு :—கிறிஸ்துவ தருமம் என்ன சொல்கிறது?

விடை :—கிறிஸ்து தருமத்தின் ஆதிபிரசாரகரான பவுல் என்னும் ஞானியின் உபதேசங்கள் கிறிஸ்துவ வேதத்தில் ஒரு பகுதி. மேற்படி ஞானியார் “குடிகாரர்கள் ஆண்டவனுடைய இராஜ்யத்தை அடைவ தில்லை” என்று தெளிவாகச் சொல்லி யிருக்கிருர்.

வினு :—இஸ்லாமிய மதம் மதுபானத்தை ஆதரிக்கிறதா?

விடை :—கிடையவே கிடையாது. இஸ்லாமிய சமயத்தைப்போல் குடியைப் பலமாகக் கண்டிக்கும் மதம் வேறில்லை. முஸ்லிம்களில் குடிப்பவர்கள் மார்க்கத்திலிருந்து விலகினவர்களாகவே கருதப்படுகிருர் கள்.

வினு :—புத்த சமயமோ?

விடை :—சன்மார்க்கமே உத்தம சமயம் என்பது பௌத்தமதத்தின் கொள்கை. அத்தகைய மதம் குடியைக் கண்டிக்காமல் விடுமா? பௌத்த சமய நூல்களில் மதுபானத்தை மகாகொடிய பாவங்களில் ஒன்ருகச் சொல்லப்பட்டிருக்கிறது.

வினு :—நீங்கள் சொல்வதைப் பார்த்தால் குடியைப்போல் மனித குலத்துக்குத் தீமையான விஷயம் வேறென்றுமில்லையென்று தோன்றுகிறதே?

விடை :—அதில் சந்தேகமேயில்லை. புருஷார்த்தங்கள் நான்கு என்பதாகப் பெரியோர் சொல்லி யிருக்கிருர்கள். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பவை. மனிதர் பெறக்கூடிய மேலான பேறுகள் இவற்றையன்றி வேறில்லை. மதுபானம் இந்த நான்கு புருஷார்த்தங்களையும் கொள்ளைகொண்டு விடுகிறது. ஆதலின் மனித குலத்துக்கு மதுபானம் ஒரு பெரிய பகையென்றே சொல்லலாம்.

* * * *

## 7

வினு: மதுபானத்தின் தீமைகளை நன்கு தெரிந்துகொண்டேன். “மதுவிலக்கு இயக்கம்” என்பது எல்லாவகை மதுபானங்களையும் அடியோடு ஒழித்துவிட முயற்சி செய்வதா?

விடை: ஆமாம். ஆகையினுல்தான் சில சமயம் “பூரண மதுவிலக்கு” என்றும் சொல்லுகிறோம்.

வினு : என்ன இருந்தாலும் வெகுநாளாய் வேர் ஊன்றிய வழக்கமல்லவா? முதலில் கொஞ்சகாலம் ஜனங்கள் மிதமாய்க் குடிக்கும்படி பிரயத்தனம் செய்துவிட்டுப் பிறகு அடியோடு ஒழிக்க முயற்சி செய்யக் கூடாதா?

விடை: கூடவே கூடாது. கொஞ்சமாய்க் குடித்தாலும் தீமை அதிகமுண்டு. மேலும் அத்தகைய அரை குறையான முயற்சி நிச்சயம் தோல்வியடையும். குடிக்கத் தொடங்கியவன் மதுவுக்கு அடிமையாகி விடுகிருன்; மன உறுதி இழந்துவிடுகிருன். அவனைப் பெருங் குடிகாரனுகாமல் தடுத்தல் பிரமப் பிரயத்தனம். “குடி” அரசின் கீழ் மித வாதமே கிடையாது.

வினு : அப்படியானுல் ஒன்று செய்யலாமே? மிகவும் கெடுதலான சிலவகை மதுபானங்களை மட்டும் முதலில் ஒழிக்கலாம்; மற்றவைகளைப் பிறகு பார்த்துக் கொண்டாலென்ன?

விடை: விஷத்தில் கொஞ்சம் கெடுதல், அதிக கெடுதல் என்பதுண்டா? எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி? எல்

லாம் கெடுதல்தான். ஒன்றை ஒழித்து மற்றொன்றை விட்டிருந்தால், குடிகாரர்கள் அந்தப் புதியவகை குடிக்கத் தொடங்குகிறார்கள். இதில் என்ன பயன் ?

வினா : உதாரணமாக, ஒன்று கூறுகிறேன். கள்ளு அவ்வளவு கெடுதலில்லை, சாராயந்தான் அதிககெடுதல் என்று சிலர் சொல்கிறார்கள். ஆகையால் கள்ளைவிட்டுச் சாராயத்தைமட்டும் முதலில் ஒழிக்கலாமே ?

விடை : நன்றாய்ச் சொன்னீர்கள். கள்ளில் மதுசாரம் குறைவாயிருந்தாலும் குடிக்கும் அளவு அதிகம். ஆகையால் தீமை ஒன்றுதான். நமது தேசத்தில் ஏழை எளியவர்களெல்லாம் கள்ளினால்தான் அழிகிறார்கள். ஆகையால் கள்ளைத்தான் உடனே தொலைக்கவேண்டும்.

வினா : அப்படியானால் கள்ளை ஒழித்துச் சாராயத்தை விட்டுவைக்கலாமல்லவா ?

விடை : ஒருநாளும் கூடாது. கள்ளுக்கடையை யெடுத்துச் சாராயக் கடையை வைத்திருந்தால் கள் குடித்தவர்கள் சாராயம் குடிக்கத் தொடங்கி இன்னும் அதிக பணம் தொலைப்பார்கள். கள்ளுக்கு 2 அணா செலவழித்தவன் சாராயத்துக்கு எட்டணா போடுவான்.




கோடுகளின் உயரம் அந்தந்த மாகாணத்தில் செலவாகும் சாராய அளவைக் காட்டுகின்றது.

வினா : அப்படியானால் கள்ளு, சாராயத்தைத் தொலைக்க வேண்டியதுதான். ஒயின், வுஸ்கி முதலிய உயர்ந்த சீமைச் சரக்குகளை விட்டு வைக்கலாமல்லவா ? இவற்றை வெள்ளைக்காரர்களும், சில பணக்காரர்களுந்தானே உபயோகிக்கிறார்கள் ?

விடை : ஐயோ ! எல்லாவற்றையும் விடப் பொல்லாத பிசாசு சீமைச்சரக்குதான். சமூகத்தில் உயர்ந்த நிலையிலுள்ளவர்கள், படித்த

வர்கள், அறிவாளிகள், உத்தியோகஸ்தர்கள், சட்டசபை அங்கத்தினர் முதலியோரையும் அந்தப் பிசாசு தன் வலையில் போட்டுக் கொண்டுவருகிறது. பாரதநாட்டில் மேல் வகுப்பாரிடையே "குடித்தல் இழிவு" என்னும் கொள்கை வெகுகாலமாய் இருந்து வந்தது. இதுமாறி, நமது சமூகத்தலைவர்களும் அடியோடு படுகுழியில் வீழ்ந்துவிட்டால் அப்புறம் நமக்கு விமோசனமேயில்லை. மேலும், கள்ளு சாராயத்தில் போகும் பணமாவது நமது நாட்டிலேயே தங்குகிறது என்று சொல்லலாம். சீமைச் சரக்கில் போடும் பணம் முழுதும் வெளிநாட்டுக்குச் செல்கிறது. ஆகையால் அதை ஒருகாலும் விட்டுவைக்கக் கூடாது.

* * * *




கோடுகளின் உயரம், மாகாணத்தில் செலவாகும் சீமைச் சரக்கின் அளவைக் காட்டுகிறது.

## 8

வினா: எல்லாவகை மதுபானங்களையும் ஒழிக்கவேண்டியதின் அவசியம் இப்போது எனக்கு நன்றாய் விளங்கிவிட்டது. அதை ஒழிப்பதற்கு வழி என்ன? "மதுவிலக்கு மதுவிலக்கு" என்று எத்தனையோ நாளாய்ப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒன்றும் நடக்க வில்லை. மதுவை ஒழித்தல் சாத்தியமா?

விடை: மனிதர்கள் முயன்றால் முடியாத காரியம் ஒன்றுமில்லை. முயற்சி போதாததுதான் காரணம். மதுவை யொழித்தல் கட்டாயம் சாத்தியம். சிற்சில தடைகள் இல்லாவிட்டால் அது மிகவும் சுலபம் என்றும் சொல்லலாம்.

வினா: அப்படியானால் அதற்கு வழி என்ன சொல்லுங்கள்.

விடை: மிகவும் சுலபமான வழி சொல்கிறேன். மதுபானக் கடைகளையெல்லாம் சாத்திவிட்டால் மதுவை ஒழித்துவிடலாம்.

வினா: இத்தனை காலமாய் அது ஏன் நடைபெறவில்லை?

விடை : தனிப்பட்ட மனிதர்கள் இத்தகைய கொடிய வியாபாரம் செய்தால் நிறுத்திவிடலாம். ஆனுல் கள்ளு சாராயக்கடைகளை சர்க்காரே நடத்துகிருர்கள்.

வினு : இதென்ன அநியாயம்? சர்க்காராவது கள்ளுக்கடை நடத்த வாவது? சர்க்கார் உத்தியோகஸ்தனு கள்ளுக்கடையில் உட்கார்ந்து விற் கிருன்?

விடை : சர்க்கார் நேராய்க் கடை நடத்துவதில்லை. ஆனுல் இன் னின்ன விடத்தில் கள்ளு அல்லது சாராயக்கடை வைக்க வேண்டு மென்று அவர்கள் தான் தீர்மானிக்கிருர்கள். பிறகு அந்தக் கடைகளை ஏலம் விடுகிருர்கள். அதிக தொகைக்குக் கோருபவனுக்குக் கடையில் கள்ளு அல்லது சாராயம் விற்க லைசென்சு கொடுக்கிருர்கள். லைசென்சு எடுப்பவன் கள்ளு, சாராயம் விற்றுவரும் லாபத்தில் சர்க்காருக்கு மாதா மாதம் கந்தாயம் கட்டிவிட்டுப் பாக்கியைத்தான் எடுத்துக் கொள்கிருன்.

வினு : ஒஹோ! இது ஒருவகைக் கூட்டு வியாபாரம் போலல்லவா தோன்றுகிறது?

விடை : ஆமாம். கள்ளு, சாராயக்கடைகளை மூடுவதற்கு இதுதான் பெரிய தடையா யிருக்கிறது.

வினு : அதெப்படி? சர்க்காரே கடை நடத்துவதால் அதை மூடு வது இன்னும் சுலபமாயிற்றே? தனிப்பட்டவர்கள் நடத்திஞலும் அவர் கள்மீது நடவடிக்கை தொடரவேண்டும்; கொஞ்சம் தாமதமாகும். இப் போது சர்க்கார் நினைத்தவுடன் கடைகளை மூடிவிடலாமே?

விடை : அது உண்மைதான். சர்க்கார் மனது வைத்தால் மது பானத்தை உடனே ஒழித்துவிடலாம். ஆனுல் அவர்கள் மனது வைப் பது கஷ்டம்.

வினு : இதென்ன அநியாயம்? ஜனங்களின் நன்மைக்காகத் தானே சர்க்கார்? கள்ளு சாராயங் குடித்து ஜனங்கள் சொல்லொணுத் துன்பங் களுக்காளாகி அழிந்துபோவதை சர்க்கார் ஏன் பார்த்திருக்கவேண்டும்? அவர்களுக்கு அதில் என்ன லாபம்?

விடை : லாபம் இருக்கிறது. முன்னமே சொன்னே னல்லவா? சென்ற வருஷத்தில் இந்தியா முழுவதிலும் சர்க்காருக்கு மதுபான வரு மானம் 24 கோடி. சென்னை சர்க்காருக்கு மட்டும் $5\frac{1}{2}$ கோடி ரூபாய் கிடைத்தது. சுலபமாய் வந்துகொண்டிருக்கும் ஒரு வருமானத்தை சர்க்கார் விடுவதென்ருல் கஷ்டம்.

# ஆறுமுகத்தின் முடிவு

[ந. ஜெ.]

இறக்கும் தறுவாயிலிருந்த ஒரு ஸ்திரீயின் படுக்கைக் கருகில் அவள் புருஷன் நின்றான். பக்கத்தில் மூன்று குழந்தைகள் அழுதுகொண்டிருந்தன. ஸ்திரீயின் முகத்தைப் பார்த்தால் துக்கமும் வறுமையும் கவலையும் அவளுடைய இருதயத்தைப் பல வருடங்களாக உருக்கி வந்ததாகக் காணப்பட்டது. மரணவஸ்தையில் நடுங்கிக் கொண்டிருந்த அம்மாதின் கை கணவனது கரத்தைக் கெட்டியாய்ப் பற்றியது. வெகு சீக்கிரத்தில் சாசுவதமாய் மூடவிருந்த கண்கள் அவனது முகத்தை உற்று நோக்கின. அம்மணிதன் அப்பார்வையால் நடு நடுங்கினான். அவனது உடை மிக அழுக்காயும், கந்தலாயும், கண்கள் இரத்த மேறியும் காணப்பட்டன. குடிப் பிசாசுக்கு அடிமைப்பட்டவன் என்பது முகத்தில் எழுதியிருந்தது. அச்சிறு வீட்டில் ஓர் சிறிய விளக்கினின்று கொஞ்சம் வெளிச்சம் வீசிற்று. வெளியில் இரவின் நிச்சப்தமும், அறையில் துக்கமும் குடிகொண்டிருந்தன. படுக்கையில் கிடந்த ஸ்திரீ தன் பிள்ளைகளைத் திரும்பிப்பார்த்து மறுபடி கணவனை உற்றுநோக்கி எழுந்து உட்கார்ந்து ஏதோ பேசப் பிரயத்தனப்பட்டு முடியாமல் சோர்வடைந்து வீழ்ந்தாள். உடனே பக்கத்திலிருந்த குழந்தைகள் குனிந்து தாயை முதலில் மெதுவாக அழைத்தார்கள். வரவர துக்கத்தாலும் பயத்தாலும் உரக்கக் கூப்பிட்டனர். ஆனால் பேச்சுமில்லை, மூச்சுமில்லை. உயிர் போய்விட்டது.

கணவன் கீழேவிழுந்து புரண்டான். வெடித்து விடும்போலிருந்த தன் நெற்றியைக் கையால் அமுக்கிக் கொண்டான். மறுபடி எழுந்து உட்கார்ந்து தன் குழந்தைகளின் முகத்தைப் பார்ப்பான். அவை திரும்பி அவனை நோக்கினால் உடனே வெட்கப்பட்டுத் தலைகுனிந்து கொள்வான். அவனுக்கு ஆறுதல் சொல்வார் ஒருவருமில்லை. குழந்தைகள் அவனிடம் நெருங்குவதற்கு அஞ்சின. கடைசியில் அறையை விட்டு அவன் வெளியே சென்றபோதும் அவனைத் தடுப்பார் எவருமில்லை. சிநேகிதரும், உற்றார் உறவினரும் இக்குடிகாரனிடமிருந்து ஒவ்வொருவராய் நழுவி விட்டனர். அவனது மனைவிமட்டும் ஸுகமோ துக்கமோ கணவனைவிட முடியவில்லை. ஆனால் அவள் அவ்வளவு அன்புடன் இருந்ததற்குப் பிரதியாக அவன் செய்ததென்ன? அன்றைய் தினங்கூடக் கள்ளுக் குடித்துவிட்டுத் தள்ளாடிக்கொண்டு மனைவி இறப்பதைப் பார்ப்பதற்கு வந்திருந்தான்.

வீட்டைவிட்டுக் கிளம்பியவன் தெருவில் வேகமாய் நடந்தான். பயம் துக்கம் முதலியவை மனதை வருத்தின. குடி மயக்கத்தாலும், மரணக்காட்சியின் அதிர்ச்சியாலும் ஒன்றும் புரியாமல் நடந்துகொண்டே இருந்தான். சற்றுமுன் குடித்த கடைக்குள் மறுபடியும் நுழைந்தான். மேலும் மேலும் குடித்தான். இரத்தம் தலைக்கேறி, மயக்கம் அதிகப்பட்டு மூளைசுழல வாரம்பித்தது. "செத்தால் என்ன? எல்லோரும் இறக்கவேண்டியது தானே? அவள் நல்லவள்தான். ஆனலிறந்து விட்டாள். இனி வருத்தப்பட்டு என்னபயன்? அவளிறந்தமட்டும் நல்லதே. கொண்டா இன்னொரு டிராம். பலே! இருக்கிறமட்டும் குஷியா யிருக்க வேண்டியது" என்று எண்ணலானன்.

* * * *

பலவருடங்கள் சென்றன. பையன்கள் பெரியவர்களாகித் தகப்பனைவிட்டு எங்கோ சென்றனர். ஆனல் அவன்மட்டும் பழையபடியே தரித்திரனும் ஆனல் இன்னும் பெரிய குடிகாரனும் ஆனன். அவனுடன் அவனது மகள் மாத்திரம் இருந்தாள். அவள் நன்ருய் உழைத்து வேலைசெய்து, அவனடித்தாலும் சரி, உதைத்தாலும் சரி, அவன் கேட்கும் போதெல்லாம் தான் சம்பாதித்த பணத்தில் அவனுக்கும் கொஞ்சம் கொடுத்துவந்தாள்.

ஒருநாளிரவு 7 மணி சுமாருக்கு ஆறுமுகம் (அதுதான் இவன் பெயர்) வீடுநோக்கி வந்துகொண்டிருந்தான். அவர்கள் இப்போது இருந்த வீட்டுக்கு நரகத்தைப் போன்ற பல சந்துகளுக்கிடையே நுழைந்து போகவேண்டும். மிகவும் அசங்கியமான ஓர் தெருவில் அவ்வீடு இருந்தது. அத்தெருவில் விளக்குகள் இல்லை. ஏதோ சிற்சில வீட்டில் போட்டிருந்த வெளிச்சம் வாசற் கதவுவழியாய் வெளியே தெரிந்தது. வீடுகளெல்லாம் தாழ்ந்த கூரையுள்ள குடிசைகள். அவற்றுள் ஒரு குடிசையை நெருங்கி ஆறுமுகம் கதவை இடித்தான். கதவைத் திறந்துகொண்டு மிகவும் மெலிந்த ஒரு ஸ்திரீ, கையில் விளக்குடன் வெளியே தலையை நீட்டி மிக்க தீனஸ்வரத்தில் "யாரது, அப்பாவா?" என்று கேட்டாள்.

"இல்லாவிட்டால் யார்? என் நடுங்குகிருய்? நான் இன்று குடிக்கவேயில்லை. கையில் பணமுமில்லை, வேலையும் கிடைக்கவில்லை. உனக்கென்ன எழவு வந்துவிட்டது? உடம்பு இன்னும் சரியாகவில்லையா?" என்று கேட்டான்.

"உடம்பு சுத்தமாய்ச் சரிப்படவேயில்லை" என்று கண்ணீர் வடித்துக் கொண்டே பதில் சொன்னுள் மகள்.

அம்மனிதன் "நீ உடம்பை சீக்கிரம் சரிப்படுத்திக்கொள்ள வேண்டும். தின்னச்சோறு வேண்டுமே? வேலைசெய்தால் தானே காசு கிடைக்கும்? ஆஸ்பத்திரிக்குப்போய் மருந்து சாப்பிடு. என் கதவிடுக்கில் நின்றுகொண்டிருக்கிறாய்? சனியனே! வழிவிடு" என்றான்.

கண்ணம்மாள் கதவின் முன்வந்து நின்றுகொண்டு மெதுவாக "அப்பா, வேணு வந்திருக்கிறான்" என்று சொன்னாள்.

"யாரது?" என்று திடுக்கிட்டாற்போல் கேட்டான் தகப்பன்.

"உஸ்! சத்தம் போடாதே. வேணு, அண்ணா வேணு."

"எதற்காக வந்திருக்கிறான்? பணம், சோறு எதாவது தேடி வந்தானா? இங்கு நமக்கே ஒன்றுமில்லை. அதிருக்கட்டும். விளக்கை இப்படிக்கொடு. என் பயப்படுகிறாய்? நானென்ன உன் அண்ணனை விழுங்கி விடுவேனா?" என்று சொல்லிவிட்டு உள்ளே போனான்.

ஓர் பழைய பெட்டிமேல், தலையைக் கையில் ஊன்றிக்கொண்டு, சுமார் 22 வயதுள்ள ஓர் வாலிபன் உட்கார்ந்திருந்தான். அவன் துணியெல்லாம் கந்தல். தகப்பனாரைப் பார்த்ததும் அவன் திடுக்கிட்டு எழுந்தான். "கண்ணு, கதவைச் சாத்து. சீக்கிரம் சாத்து. என் அப்பா, ஏதோ முன் பின் பார்க்காதவனைப்போல் பார்க்கிறாய்! என்னை வீட்டை விட்டுத் துரத்திப் பல வருஷங்கள் ஆனதால் என்முகம் மறந்து விட்டாய் போலிருக்கிறது" என்றான்.

"அதிருக்கட்டும். இப்பொழுது எதற்காக இங்கு வந்தாய்?" என்று ஆறுமுகம் கேட்டான்.

"சிறிது காலம் தலைமறைவாயிருக்க வந்தேன். அகப்பட்டால் தூக்குமரத்தில் தொங்கவேண்டும். வெளியில் எங்கே சென்றாலும் அகப்பட்டுக்கொள்வேன்" என்றான்.

"இதென்ன? நீ சொல்லுகிறதைப் பார்த்தால் எங்காவது கொள்ளை, கொலை செய்த மாதிரியல்லவோ இருக்கிறது?"

"அப்படித்தான் இருக்கட்டுமே. இது உனக்கு ஆச்சர்யமா யிருக்கிறதா என்ன?" என்று தகப்பனை உற்று நோக்கிய வண்ணம் சொல்ல, தகப்பன் அப்பார்வையாற் கூசிக் கீழேநோக்கிக் குனிந்துகொண்டான்.

"உன் தம்பி எங்கே" என்று நெடுநேரம் கழித்துக் கேட்டான் தகப்பன்.

"இனி அவன் உன்னைத் தொந்திரவு செய்ய மாட்டான். கணேசன் இறந்து விட்டான்."

"செத்துப் போனானா?" என்று ஆறுமுகம் நடுக்கத்துடன் கேட்டான்.

" ஆமாம். சூதாட்டக் கம்பெனியில் சண்டை வந்து ஒரு குடி வெறியன் அவனைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டான். எல்லோரும் ஓடிப் போனார்கள். அவன் கீழே விழும்போது நான் தாங்கிப் பிடித்துக் கொண்டேன். அவனது விலாவிலிருந்து இரத்தம் பெருகி என் கை வழியாய் ஓடிற்று. 'ஐயோ! அம்மா! உன்னிடம் வந்து விட்டேன்' என்று அவன் கையைக் கூப்பினான். 'அண்ணா! அம்மா இறந்து போய் அப்பா எதற்குத் தங்கினர்? அம்மா இருந்தால் நாமிவ்வித நிலைமைக்கு வருவோமா?' என்று சொல்லிவிட்டுப் பிராணனை விட்டான்."

இதைக் கேட்டதும் கண்ணம்மாள் உரத்த குரலில் அழுதாள். தகப்பன் தலைகுனிந்தபடி உடம்பை ஆட்டிக்கொண்டிருந்தான். கொஞ்சம் நேரம் கழித்து "நீ என் பயந்து ஒளிகிறாய்?" என்று கேட்டான்.

" துப்பாக்கிச் சத்தம் கேட்ட போலீசார் வந்து என்னைப் பிடித்துக் கொண்டனர். நான் தான் என் தம்பியைக் கொன்றேனென்று கைது செய்தார்கள். நானென்ன சொல்லியும் விடவில்லை. ஜெயிலில் போட்டார்கள். கடைசியில் தப்பித்துக்கொண்டு இங்கு வந்துசேர்ந்தேன். இப்பொழுது பிடிபட்டால் அந்தச் சூதாடி கொன்றதற்காக நான் தொங்க வேண்டும். ஆனால் இங்கிருந்தால் நீ வெளிப் படுத்தினாலொழிய நான் பிடிபடமுடியாது. ஏதோ சிலகாலம் இங்கே தலைமறைவாயிருந்து பிறகு தூரதேசம் போய்விடுகிறேன்" என்றான்.

* * * *

பிறகு இரண்டு நாள் தகப்பன், மகன், மகள் யாரும் வீட்டைவிட்டு வெளிக் கிளம்பவேயில்லை. இவ்விரண்டு நாளும் அம்மனிதன் குடிக்கவும் இல்லை. ஆனால் மூன்றாவது நாள் கண்ணம்மாவுக்கு ஜுரம் அதிகம். வீட்டிலிருந்த சாப்பாடும் முடிந்தது. யாராவதொருவர் வெளியே போக வேண்டியதாயிற்று. இருண்டதும் தகப்பன் வெளியே சென்றான். ஒரு நாட்டு வைத்தியனைக் கெஞ்சி மகளுக்கு ஜுரத்துக்கென்று கொஞ்சம் மருந்து வாங்கிக்கொண்டான். இங்குமங்கு மலைந்து பிச்சையெடுத்து நான்கணா சம்பாதித்தான். வீட்டிற்குத் திரும்புகையில் சாராயக் கடை வழியே வர நேர்ந்தது. அதைப் பார்த்ததும் பழக்கத்தால் சிறிது தயங்கினான். பிறகு மனதைத் திடப்படுத்திக்கொண்டு அப்பால் நடந்தான். மறுபடியும் திரும்பிவந்தான். இன்னும் சிறிது தயங்கிக் கடைசியில் அரை டிராம் வாங்கிக் குடிக்கலாம், அதற்குமேல் வேண்டாமென்று எண்ணி உள்ளே நுழைந்தான். இவனை யறியாமல் இருவர் இவனைக் கவனிப்பது இவனுக்குத் தெரியவில்லை. அவர்கள் இரகசிய போலீஸ் காரர்கள். இவன் மகனைத் தான் தேடிவந்தனர். தேடித் தேடி அலுத்து சிக்கவில்லை யென்று விடும் சமயம் இவன் தயங்கித் தயங்கி நடப்பதைக்

கண்டு இவனைக் கவனிக்கலாயினர். கடைசியில் இவன் சாராயக் கடைக்குள் நுழைந்ததும் அவர்களும் பின்னல் உள்ளே போனார்கள்.

" அண்ணே, கையில் பணமில்லை போலிருக்கிறது. வா, நம்மோடு குடிக்கலாம். இந்தக் காசு என்ன, நம்மோடு சாகும்போது வருமா" என்று ஒரு கிளாஸ் நீட்டிக்கொண்டே சொன்னான் ஒருவன்.

" நம்முடனும் ஒரு டிராம் குடிக்கவேண்டும். இருக்கும் வரையில் சுகமாயிருக்கலாம் " என்றான் மற்றவன்.

ஆறுமுகத்துக்கு உடனே புத்தி மயங்கிவிட்டது. தன் குழந்தைகள் பட்டினி கிடப்பதும், மகளின் உடம்பு அசவுக்கியமும், மகனது உயிர் தன் கையிலிருப்பதும் அவனது கண்முன் தோன்றின. அவனுக்குக் குடிக்கவும் மனம் வரவில்லை, குடிக்காமலிருக்கவும் முடியவில்லை. இவ்விதமாகத் தன்னைப் பிடித்திருந்த பிசாசிற்கும் அறிவிற்கும் பெரிய யுத்தம் ஆரம்பமாயிற்று. கடைசியில் பிசாசே ஜெயித்தது. தன் குழந்தைகளின் க்ஷேமம், உயிர் முதலியன குடிகாரன் மனதில் நிற்கவில்லை. குடிப் பழக்கமே வென்றது. போலீஸார் வாங்கித் தந்த சாராயத்தையும் குடித்துவிட்டு, சாப்பாட்டுக்காகத் தான் வைத்திருந்த பணம் முழுவதையும் செலவுசெய்து குடித்தான். பிறகு வெகுநேரம் கழித்துத் தள்ளாடிக்கொண்டு வெளியே கிளம்பினான்.

" இன்று மழை வரும்போலிருக்கிறது " என்றான் ஒரு போலீஸ்காரன்.

" அதிருக்கட்டும். அந்தப் பையன் அகப்படவேயில்லையே. துரதிர்ஷ்டசாலி ! நல்ல சமாசாரம் சொல்லலாமென்று பார்த்தால், அதற்காக எவ்வளவுதான் தேடலாம் ? சர்க்கார் அவனை மன்னித்துவிட்ட செய்தி தெரிந்தால் எவ்வளவு சந்தோஷப்படுவான் ?" என்றான் மற்றவன்.

" ஒரு வேளை அவனுக்குத் தெரியுமோ, என்னமோ ?" என்றான் முதல் போலீஸ்காரன்.

" அதெப்படித் தெரிந்திருக்கும் ?......"

" ஆமாம். அவனுக்கு சத்தியமாய்த் தெரியாது !" என்று இடையே மொழிந்தான் தகப்பன். இதைக் கேட்டதும் போலீஸ்காரர் ஒருவருக்கொருவர் கண்சிமிட்டிக் கொண்டனர்.

" அப்படியா ? உன்னைப் பார்த்தது அவனது நல்லகாலம் தான் " என்றான் அவர்களில் ஒருவன்.

" ஆமாம், மிகவும் நல்லகாலம் " என்றான் மற்றவன்.

"கொண்டா, இன்னொரு டிராம்" என்று ஆளுக்குக் கொஞ்சம் வாங்கித் தகப்பனுக்கு மேலும் கொடுத்தனர். ஐந்து நிமிஷ நேரத்தில் தகப்பன் தன் மகன் உயிரை அவர்கள் கையிற் கொடுத்தான்.

இது நிற்க, அண்ணனும் தங்கையும் வீட்டில் உட்கார்ந்துகொண்டு யாராவது வரும் சப்தம் கேட்கிறதா என்று கவனித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு ஒரு மணி ஒரு யுகமாய்ச் சென்றது. கடைசியில் காலடிச் சப்தம் வழிநடையிற் கேட்டது. தகப்பன் தள்ளாடி விழுந்து கொண்டே உள்ளே சாய்ந்தான். அவன் குடிமயக்கத்துட னிருப்பதைக் கண்டு மகள் விளக்குடன் அவனைத் தாங்குவதற்கு முன் வந்தாள். ஆனால் தட்டென்று நின்று ஒரு கூச்சலிட்டுத் தரையில் மூர்ச்சையாய் விழுந்தாள். காரணம் என்னவெனில் வெளியே இருவர் குரூர நகையுடன் நிற்பதை அவள் கண்டுவிட்டாள். போலீசார் இருவரும் உடனே உள்ளே பாய்ந்து மறு க்ஷணம் வாலிபனைக் கைவிலங்குடன் கைதியாக்கினர். "பேஷ்! மிகவும் சுலபமாய் முடிந்தது. பாவம் அப்பெண்ணைத் தூக்கு. ஏனம்மா அழுகிறாய்? இனிப் பிரயோஜனமில்லை. எல்லாம் தீர்ந்தது" என்றான் போலீஸ்காரர்களில் ஒருவன்.

கைதியாக்கப்பட்ட வாலிபன் குனிந்து ஒரு தடவை தன் தங்கையைப் பரிதாபமான பார்வையுடன் பார்த்தான். பிறகு மிகக் கரேமான பார்வையுடன் குடிமயக்கத்தில் ஒன்றும் தெரியாமல் விழித்துக்கொண்டிருந்த தகப்பனைப் பார்த்து "அப்பா! இதைக்கேள்" என்றான். "உன் மக்கள் இருவரையும் கொன்றாய். நீ இதுவரையும் உன் மக்களை அன்பாகப் பார்த்ததாவது பேசியதாவது கிடையாது. நானிறந்தாலும் என் சாபம் உன்னைவிடாது. என்னைத் தூக்குப் போடுவார்கள். நீயும் இறக்கத்தான் போகிறாய். நீ சுவாமிமுன் நிற்கும் பொழுது உன் மனைவி மக்கள் உன்மேற் பழிதீர்த்துக் கொள்வார்கள்" என்று உரக்கக் கத்திப் பல்லைக் கடித்துக்கொண்டு தகப்பனைப் பார்த்தவண்ணம் வெளியிற் சென்றான். பிறகு தகப்பனும் மகளும் வேணுவை இப்பூவுலகில் காணவில்லை.

* * * *

மரம்போல் இரவு முழுதும் தூங்கிய குடிகாரன் மறுநாட் காலை தூக்கத்திலிருந்து எழுந்தான். எழுந்தவன் தான் தனியே இருப்பதைக் கண்டான். உடனே சுற்றுமுற்றும் பார்த்தான். தரையிற் கிடந்த பாயில் ஒருவரும் படுத்திருந்ததாகக் காணவில்லை. எல்லாம் முதல்நாள் அவன் பார்த்தபடி இருந்தது. அக்கம் பக்கத்தில் தன் மகளைப்பற்றி விசாரித்தான். ஒரு புலனும் அகப்படவில்லை. தெருத் தெருவாயலைந்தும் பயன் படாமல் மிகவும் களைத்து இரவில் வீட்டையடைந்தான். மூன்று நாள் இவ்விதமே காலம் கழித்தான். கடைசியில் மகளைக் காணும்

ஆசையை விட்டான். சாப்பாட்டிற்கு ஒன்றும் கிடைக்காமல் சிலகாலம் பட்டினி கிடந்தான். பிறகு முடியாமல் வீடு வீடாய்ப் பிச்சைகேட்க ஆரம்பித்தான். எவராவது இரங்கிக் கொடுத்த ஒரு காசு இரண்டு காசைப் பழையபடியே செலவுசெய்து வந்தான். இவ்விதம் ஒரு வருடம் கழிந்தது. எங்காவது பாழ் மனை மண்டபம் முதலிய விடங்களில் தூங்கினான். எவ்வளவு கஷ்டப்பட்டும் கடைசிமட்டும் குடியை விட வில்லை. கடைசியில் ஓர் நாள் மிகவும் களைத்துப்போய்த் தெருவில் வீழ்ந்தான். அவனது கன்னம் ஒட்டிப்போயிற்று. கண் குழி விழுந்து இருண்டு ஒளி மங்கியது. அவனது கால்கள் உடலின் பாரத்தைத் தாங்கமாட்டாமல் தள்ளாடின. அடிக்கடி உடம்பு நடுக்கமெடுத்தது.

அவன் வாணாள் முழுவதும் அவன் கண்முன் இன்று தோன்றிற்று. நல்ல வீடு ஒன்று தனக்கு இருந்ததையும், அடிக்கடி உற்றார் உறவினர் வந்துபோனதையும், தன் சகோதர சகோதரிகள் தன்னை அடிக்கடி சுற்றிவந்ததையும் நினைத்தான். அதைநினைக்கும்போதே அவர்களுடைய உருவங்கள் கையால் தொடும்படி அருகில் நிற்பதுபோல் அவன் கண் முன் தோன்றின. மறந்துபோன பல முகங்கள் அவனைப் பரிகஸிப்பது போல் இப்பொழுது காணப்பட்டன. உயிர் நீங்கி மறைந்துபோன பல குரல்கள் அவனது காதில் ஒலித்தன. ஆனால் இதெல்லாம் ஒரு க்ஷண நேரமே. அவன் மேல் பலமாய் மழைபெய்ய ஆரம்பித்தது. குளிர் நடுக் கிற்று. பசி அவனது குடலைப் பிய்த்தது.

சிறிது நேரத்தில் மறுபடி எழுந்து நடக்கமாட்டாமல் தள்ளாடிக் கொண்டு கொஞ்சதூரம் நடந்தான். வீதியில் அதிக ஜன நடமாட்ட மில்லை. அங்கு மிங்கும் நடந்த சிலர் மழையினால் வெகு வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தனர். காற்றின் மிகுதியால் குடிகாரனின் முன கல் கேட்கவேயில்லை. அடிக்கடி அவனது சரீரம் நடுங்கும்போது, அவ னது இரத்தவோட்டம் நின்றது. ஓர் சுவரின் புறமாய் ஒடுங்கித் தூங் கப் பார்த்தான். ஆனால் அவனது பஞ்சடைந்த கண்களினின்றும் தூக் கம் பறந்தது. அவன் மனம் பல இடங்களில் சஞ்சரித்தது. ஒருவித இரைச்சல் அவன் காதில் ஓலமிட்டது. தனக்கு மிக அருகே உயர்ந்த உணவுகள் இருப்பதாய் அவன் கண்டான். ஆனால் உடனே தான் தனிமையாய் வீதியில் கிடப்பதையும், தன் மேல் மழை வீழ்வதையும், சிறிது சிறிதாகத் தன் உயிர் போவதையும், கவனிப்பார் எவருமின்றித் தனியே இருப்பதையும் உணர்ந்தான்.

திடீரென்று ஒருவிதப் பயங்கரக் கூச்சலுடன் குதித்தெழுந்தான். தன் குரல் தன்னையு மறியாமல் கிளம்பிக் கத்துவதைக் கண்டு நடுங்கி னான். கொஞ்சம் கொஞ்சமாய்ப் பிதற்ற வாரம்பித்தான். அவனது

அறிவு சிறிது சிறிதாக அவனைவிட்டு விலக ஆரம்பித்தது. அரை குறையான பேச்சுக்கள் அவனது வாயினின்றும் கிளம்பின. தேகம் நெருப்புப் பட்டதுபோல் எரிய வாரம்பித்தது. கைகளால் தேகத்தைக் கிழித்துக் கொள்ளத் தொடங்கினான். தலையைத் தூக்கி வீதியில் அங்குமிங்கும் பார்த்தான். மூளை கலங்கிப் பித்துப்பிடித்துப் போவோரைப் பற்றி எண்ணினான். சிறிது காலத்திற்கு முன், வீடு வாசலில்லா நிர்க்கதியான ஒருவன், பசிக் கொடுமையால், தன்னைத் தானே குத்திக்கொள்ள ஓர் கத்தியைத் தீட்டிக் கொண்டிருந்ததாகச் சொல்லக் கேட்டது நினைவிற்கு வந்தது. உடனே இவனும் ஒரு தீவிர தீர்மானத்திற்கு வந்தவன்போல் கிளம்பி அருகிலிருந்த ஆற்றங்கரையை அடைந்தான்.

மழை நின்றுவிட்டது. எங்கும் நிச்சப்தமாயிருந்தது. விகாரமான பல உருவங்கள் அலைகளின்மேல் கிளம்பி இவனை அழைப்பதுபோல் தோன்றியது. ஆழ்ந்த கண்களுடன் பிசாசுகள் இவனது தடுமாற்றத்தைப் பார்த்துப் பரிகசிப்பதுபோல் காணப்பட்டது. பின்னாலிருந்து விகார சப்தங்கள் முன்னுக்குத் தள்ளின. உடனே அவன் நாலடி பின்னுக்குப்போய் அங்கிருந்து ஓடிவந்து எழும்பித் தண்ணீரில் வீழ்ந்தான்; மூழ்கினான். சிறிது நேரத்திற்கெல்லாம் மேலே தண்ணீர் மட்டத்திற்கு வந்தான். ஆனால் அந்த நாலைந்து வினாடிக்குள் அவனது எண்ணங்களில் என்ன மாறுதல்கள் உண்டாயின? எவ்விதமாயினும் சரி, உயிரிருந்தாற் போதும்; தரித்திரமோ, கஷ்டமோ எவ்விதமாயினும் சரி, உயிர் தப்பினால் போதும் என்றெண்ணினான். தன்னை அமுக்கப்பார்க்கும் தண்ணீருடன் காலையும் கையையும் உதைத்துக்கொண்டு சண்டையிட்டுத் தத்தளித்தான். பயத்தால் கூச்சலிட்டான். அவனது குழந்தைகளின் சாபமே அவனது காதில் ஒலித்தது. ஒரு சாண் வந்தால் கரை ஏறிவிடலாம். ஆனால் ஆற்றின் வேகம் அவனை அடித்துக்கொண்டு போயிற்று. அவன் மறுதரம் மூழ்கினான். மறுபடியும் வெளிக்கிளம்பி உயிருக்கு மன்றாடினான். ஒரு கணநேரம் ஆற்றங்கரையிலுள்ள கட்டிடங்கள், அவைகளிலுள்ள விளக்குகள், வேகமாய் ஆகாயத்திற் போகும் சந்திரன், மேகம் முதலியன தெளிவாய்த் தெரிந்தன. ஆனால் உடனே முழுகினான். மறுபடியும் கிளம்பினான். ஒரே ஜோதியாய் நெருப்புத் தூண்கள் தோன்றி அவனது கண்கள் மயங்கும்படி ஜ்வலித்தன. தண்ணீர் பேயிரைச்சலுடன் அவனது காதில் இடித்தது. நினைவு இழந்தான்.

ஒருவாரம் கழித்து அவனது பிரேதம் உருவம் அடையாளம் தெரியாமல் ஆற்றங்கரையில் கீழே ஓர் ஊர்ப்பக்கம் ஒதுக்கப்பட்டது.

———

# கடற்கரைக் கிளிஞ்சல்

ஆப்கானி ஸ்தானத்தின் புதிய அரசர் நாதிர்ஷா தாம் பட்டத்துக்கு வந்ததும் வெளியிட்ட இராஜசாஸனத்தில், மதுவிலக்கை முக்கியமாகக் குறிப்பிட்டிருக்கிறார். தேசத்தில் பூரண மதுவிலக்கு உடனே அமுலுக்குக் கொண்டு வரப்படுமென்றும், அச்சட்டம் கண்டிப்பாக நடத்திவைக்கப்படுமென்றும் சொல்லியிருக்கிறார்.

*　　　　*　　　　*　　　　*

இந்தியாவிலுள்ள பெரிய மாகாணங்களுக்குள் குடிக்கு முதல் பரிசு பம்பாய்க்கும், இரண்டாவது பரிசு சென்னைக்கும் அளிக்கவேண்டும். வங்காளம் கடைசியாக நிற்கிறது. பம்பாய் மாகாண வாசிகள் சராசரி தலைக்கு ரூ. 2-2-0 வீதமும், சென்னைவாசிகள் தலைக்கு ரூ. 1-4-10 வீதமும் கலால் வரி கொடுக்கிறார்கள். வங்கநாட்டார் தலைக்கு 0-7-8 தான் கொடுக்கிறார்கள்.

*　　　　*　　　　*　　　　*

சென்னை மாகாணத்தின் ஜனத்தொகை 4 கோடி 30 லட்சம். மொத்தம் சர்க்கார் அடையும் கலால் வருமானம் $5\frac{1}{2}$ கோடி ரூபாய். வங்காளத்தின் ஜனத்தொகை 4 கோடி 70 லட்சம்; அதாவது சென்னையை விட அதிகம். ஆனால் கலால் வருமானம் $2\frac{1}{4}$ கோடிக்கும் குறைவு. பம்பாய் மாகாணத்தின் ஜனத்தொகை வங்காளத்துக்கு மூன்றில் ஒரு பங்கு தான். ஆனால் பம்பாய் அரசாங்கத்தார் கலால் வரியில் 4 கோடி ரூபாய் சம்பாதிக்கிறார்கள்.

*　　　　*　　　　*　　　　*

தாதுபுஷ்டி லேகியமென்றும், பல விருத்திக்கு மருந்தென்றும் பலவகையான விளம்பரங்களைப் பத்திரிகைகளிலும் பிற இடங்களிலும் காண்கிறோம். இவற்றுள் பலவற்றில் கஞ்சா அல்லது அபினி கலந்திருக்கும். பொய் விளம்பரங்களால் மோசம் போய் எத்தனையோ இளைஞர்களும் மற்றவர்களும் விஷத்தை மருந்தென்று வாங்கித் தின்று, பணத்தையும் தொலைத்து, வாழ்வையும் கெடுத்துக் கொள்கிறார்கள்.

*　　　　*　　　　*　　　　*

"குடியால் கெட்ட குடும்பம் அல்லது சுப்பம்மாள் பத்தினிக் கடவுள்" என்னும் புத்தகம் வரப்பெற்றோம். இக்கதையின் ஆசிரியர் பண்ணுருட்டி ஸ்ரீமான் சி. கோவிந்தசாமி ராஜா. கிடைக்குமிடம்:— வி. விஜயராகவலு, 62, மன்னார்சாமி கோயில் தெரு, ராயபுரம், சென்னை. விலை அணா 8.

*　　　　*　　　　*　　　　*

பாவம் ஐந்தையும் மேவக்கொள்வது
குடியைக் கெடுக்குங் குடியே யாகும்
குடியால் விளையுங் கொடுமையோ அளவில
மானம் அழியும் மதியுங் குன்றும்
நிறையும் மறையும் நெறியும் பிறழும்
உடலும் மெலியும் குடலும் நலியும்
புண்ணும் நோயும் உண்ணும்
கல்வியுந் துணை செயா செல்வமுந் துணைசெயா.

—திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

* * * *

இந்தியாவில் மொகலாய சாம்ராஜ்யத்தை ஸ்தாபித்தவன் பாபர் சக்கரவர்த்தி. இவன் மதுபானத்தை விட்டதைக் குறித்த ருசிகரமான வரலாற்றைச் சரித்திரம் கூறுகின்றது. 1524-ம் வருஷத்தில் பாபர் தனக்கு இணையான மற்றொரு மகாவீரனைப் போர்க்களத்தில் சந்தித்தான். இவன் இராணாசங்கன் என்னும் இராஜபுத்திர மன்னன். இவ்விருவருக்கும் கனுவா என்னுமிடத்தில் பெரிய யுத்தம் நடந்தது. பாபருடைய சைனியங்கள் தோல்வியடைந்து வந்தன. மேலும் மேலும் தன் வீரர்கள் முறியடிக்கப்பட்டு ஓடுவதை பாபர் பார்த்தான். அச்சமயத்தில் பாபர் ஒரு பெரிய தீர்மானம் செய்தான். "இனிமேல் மதுவைக் கையாலும் தொடுவதில்லை" என்று அவன் சபதம் கூறினான். பொன்னாலும் வெள்ளியினாலுமான அவனுடைய மதுபானக் கோப்பைகளை யெல்லாம் உடைத்தெறிந்து அந்தத் துண்டுகளை யெல்லாம் ஏழைகளுக்குத் தானம் செய்துவிடும்படி கட்டளையிட்டான். அதே சமயத்தில் அவனுடைய பிரதான போர்வீரர்களில் 300 பேர் தாங்கள் குடிக்க வைத்திருந்த மதுவைத் தரையில் கவிழ்த்துவிட்டு "இனி மதுவைத் தொடுவதில்லை" என்று விரதம் எடுத்துக் கொண்டார்கள்.

* * * *

அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டம் ஏற்பட்டதற்கு முன்பு, அந்நாட்டில் குடிக்காக வருஷந்தோறும் 400 கோடி ரூபாய் செலவாகி வந்தது. இதில் சர்க்கார் அடைந்த வருமானம் 67 கோடி ரூபாய்! ஆனால் இவ்வளவு பணத்தையும் அத்தேசத்து அரசாங்கத்தார் வேண்டாமென்று தள்ளி மதுவிலக்குச் சட்டம் செய்தார்கள். இதனால் அவர்கள் வருமானம் போதாமல் திண்டாடிய துண்டா? கிடையவே கிடையாது. மதுவிலக்கின் பயனாக நாட்டில் செல்வம் ஏராளமாய்ப் பெருகவே, வேறுவழிகளில் வரி யதேஷ்டமாய்க் கிடைத்தது. ஆகவே சட்டம் ஏற்பட்ட ஏழு வருஷத்துக்குப் பிறகு, சர்க்கார் வருமானம் தேவைக்கு மேல் அதிகமாயிருந்தபடியால், ஐந்து கோடி பவுன் வரியைத் தள்ளிவிட்டார்கள். மறுபடியும் அடுத்த 1927-ம் வருஷத்தில் 46 கோடி பவுன் வரி குறைக்கத் திட்டம் போட்டார்கள்! நமது தேசத்திலும் கள்ளு சாராயம் ஒழிந்தால் கொஞ்சநாளில் இத்தகைய நிலைமைதான் ஏற்படும். வருமானம் போதாமல் சர்க்கார் திண்டாடுவதற்குப் பதிலாக, நல்ல காரியங்களில் செலவு செய்வதற்கு ஏராளமான வருமானம் கிடைக்கும்.

* * * *

அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டத்தை நடத்திவைப்பதற்காக ஏராளமான பணம் தண்டச் செலவு ஆகிறதென்று சமீபத்தில் கலால் மந்திரி ஸ்ரீமான் முத்தையா முதலியார் ஒரு பிரசங்கத்தில் சொன்னார். இது முற்றும் தவறான செய்தி. மது வியாபாரத்தில் ஏராளமான பணம் சம்பாதித்து வரும் மது வியாபாரிகள் மதுவிலக்குக்கு விரோதமாய்க் கட்டிவிடும் பூச்சாண்டிகளில் இதுவும் ஒன்று.

சமீபத்தில் தான் அமெரிக்காவின் மதுவிலக்குக் கமிஷனர் டாக்டர் ஜே. எம். டோரான் இந்தப் பொய்யைத் தக்க ஆதாரத்துடன் மறுத்திருக்கிறார். சென்ற 1928-ம் வருஷம் வரையில், அதாவது அமெரிக்காவில் மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வந்தபின் ஒன்பது வருஷத்தில் அச்சட்டத்தை நடத்துவதற்கான செலவுக்கு அவர் கணக்கு வெளியிட்டிருக்கிறார். அந்தக் கணக்கு வருமாறு:—

| | டாலர் |
|---|---|
| மதுவிலக்கு இலாகா | 72,622,385 |
| கடற்கரைக் காவல் | 67,556,200 |
| கடற்சுங்க இலாகா | 1,000,000 |
| வழக்கு விசாரணைக்காக நீதி இலாகா செலவில் பங்கு | 72,000,000 |
| மொத்தம் மதுவிலக்குக்கான செலவு | 213,178,585 |
| சட்டத்தை மீறியவர்களிடமிருந்து அபராத வசூல் | 460,502,892 |
| பாக்கி சர்க்காருக்கு லாபம் | 247,324,307 |

ஆகவே மதுவிலக்குச் சட்டத்தினால் வரி கொடுக்கும் ஜனங்களுக்கு நஷ்டம் எதுவும் ஏற்படுவதற்குப் பதிலாக, உண்மையில் 24 கோடி டாலர் லாபமே வந்திருக்கிறது.

மதுவிலக்குச் சட்டம் செய்தால் லாபத்தை முன்னிட்டுத் திருட்டு வியாபாரிகளும் ஒரு சில பணக்காரர்களுமே அதை மீறத்துணிவார்கள். அவர்களுக்கு அபராதம் போட்டுப் பணம் வசூலித்து சாதாரண குடிகளுக்கு எவ்விதப் பணப்பொறுப்பும் இல்லாமல் செய்யக்கூடும்.

* * * *

“நாம் தான் குடிப்பதில்லையே? மதுவிலக்கைப்பற்றி நமக்கென்ன கவலை?” என்றிருக்கக் கூடாது. ஊரில் பிளேக் அல்லது காலரா வந்தால் “நம் வீட்டில் இல்லையே? நமக்கென்ன?” என்று இருப்போமா? மதுபானமும் அது போன்றதுதான். நமக்குப் பயமில்லை யென்றாலும், நமது குழந்தைகள் அந்தப் பேய்க்கு அடிமையாகாமல் எச்சரிக்கையாயிருக்க வேண்டாமா?

* * * *

சென்னை இராஜதானியில் நாள் ஒன்றுக்குக் கள்ளுக்காகச் செலவாகும் தொகை நாலு லட்சம் ரூபாய்! சாராயம், பீர், சீமைச்சரக்கு இவைகளுக்காகும் செலவு ஒரு லட்சம் ரூபாய்! இரண்டு வகையிலுமாக 80 லட்சம் ஜனங்களின் ஒரு வேளைச் சாப்பாட்டைக் கள்ளரக்கன் தினந்தோறும் விழுங்கி வருகிறான்.

* * * *

பம்பாய் அரசாங்கத்தார் நியமித்த கலால் விசாரணைக் கமிட்டியின் அறிக்கையில் பின்வரும் வாக்கியங்கள் காணப்படுகின்றன :—

"கலால் வரி பொருளாதார தத்துவத்துக்குப் பொருந்தும் வரியன்று. மதுபான வியாபாரத்தினால் புதிய செல்வம் கொஞ்சம்கூட உற்பத்தியாவதில்லை. கள்ளு விற்பனை செய்து வரிவசூலிப்பதும், அரசாங்க நிர்வாகத்துக்கு வேண்டிய செலவில் காற்பங்குக்குக் குடிகாரர்களை நம்பியிருப்பதும் நல்ல அரசியல் முறையன்று; முற்றும் அறிவீனமாகும்."

* * * *

நீலகிரியில் எதோ மதுவிலக்குச் சோதனை செய்து பார்த்ததாகவும், அது தோல்வியடைந்து விட்டதாகவும் சிலர் ஒரு பொய் வதந்தியைப் பரப்பிவருகிறார்கள். உண்மை யென்னவென்றால், நீலகிரியிலுள்ள மலைச் சாதியாருக்கு, வைத்தியர்களின் அத்தாட்சியில்லாமல் சாராயம் விற்கக் கூடாதென்று சர்க்கார் உத்திரவு போட்டார்கள். இதன் பயனாக, மலைச்சாதியின ரல்லாத மற்றவர்கள் சாராயம் வாங்குவது அதிகமாய் விட்டதாம். அதாவது மற்றவர்கள் சாராயம் வாங்கி மலைச் சாதியாருக்கு விற்றுத் தாங்கள் கொஞ்சம் லாபம் சம்பாதித்தார்கள். இது இப்படித்தான் ஆகுமென்று குருடன்கூடச் சொல்வான். சில கடைகளை வைத்துக்கொண்டு சில கடைகளை மூடுவது, சிலருக்குமட்டும் விற்கக் கூடாதென்பது—இதுபோன்ற அரை குறை முயற்சிகளெல்லாம் நிச்சயமாய்த் தோல்விதான் அடையும். கள்ளை நிறுத்த ஒரே ஒரு வழிதான் உண்டு. அது, கள்ளை அடியோடு நிறுத்திவிடுவது தான்.

* * * *

ஸர் பிரடெரிக் டிரீவ்ஸ் என்பவர் ஆங்கில சைனியத்தைச் சேர்ந்த பெயர் பெற்ற வைத்தியர். தென்னாப்பிரிக்காவில் நடந்த போயர் யுத்தத்தின்போது இவர் மகத்தான சேவை செய்தார். ஐரோப்பிய காமயுத்தத்தின்போது பிரிட்டிஷ் சைனியம் மிகச் சிறந்த வைத்திய உதவி பெற்றிருந்ததற்கு இவருடைய திறமையே முக்கிய காரணமாகும். மதுவைப் பற்றி இவர் சொல்லியிருப்பதைக் கேளுங்கள் :—

"லேடிஸ்மித் கோட்டைக்கு உதவிசெய்யப் போன போர்வீரர்களுடன் நானும் போனேன். கோடை மிகக் கடுமையா யிருந்தபடியாம் எல்லாரும் மிகவும் கஷ்டப்பட்டுப் போனார்கள். ஆனால் 30,000 பேர் அடங்கிய அந்தப் பெரிய சைன்யத்தில் முதலில் சோர்ந்து விழுந்தவர்கள் யார்? உயரமானவர்கள் அல்ல; குட்டையானவர்கள் அல்ல; தடித்தவர்களுமல்ல; மெலிந்தவர்களுமல்ல;—விழுந்தவர்கள் அத்தனை பேரும் குடிப்பழக்க முள்ளவர்கள்!"

* * * *

ஸர் பிரடெரிக் டிரீவ்ஸ் மற்ருேரிடத்தில் சொல்லியது :—" என் வாணுளில் பெரும் பகுதியைச் சத்திர சிகிச்சை (ஆபரேஷன்) செய்வதில் கழித்தவன் நான். சிற்சில மனிதர்களுக்கு தைரியமாய்ச் சத்திர சிகிச்சை செய்வேன். வேறு சிலர் விஷயத்தில் கொஞ்சம் தயங்குவேன். ஆனல் எல்லாரிலும் அதிகமாக நான் அச்சிகிச்சை செய்யப் பயந்தது குடிகாரர்களுக்குத் தான். குடிகாரனுக்கு ஆபரேஷன் செய்வதுபோல் அபாயமான சங்கதி வேறுகிடையாது."

* * * *

மதுவிலக்குச் சட்டம்செய்தால் அரசாங்க வருமானம் போதாமல் திண்டாட நேரிடுமென்பது வீண்கதை. முதலில் கொஞ்சம் கஷ்டம் நேர்ந்தாலும் பின்னல் இருவகையில் அரசாங்கத்தார் லாபமடைவார்கள். எப்படியென்ருல், குடியொழிந்ததின் பயனுக தேசத்தில் செல்வம் பெருகிப் பல துறைகளிலும் வரிவசூல் அதிகமாகும். இது ஒரு வகை லாபம். இரண்டாவது, குடியொழிந்த நாட்டின் ஜனங்களுக்கு அரசாங்கத்தார் அதிக செலவுசெய்ய வேண்டியிராது. சிறைச்சாலைகள், போலீஸ், வைத்திய வசதி இவைகளுக்குச் செலவு குறைந்துபோகும். இது மற்ருெருவகை லாபம்.

* * * *

" மதுவைத் தொடாவிடில் நீ மகிழ்ச்சி அதிக மடைவாய்! சுகம் அதிகம் பெறுவாய்! பணம் மிகுதி உறுவாய்!" என்று ஸர் ஆர்தர் கோனன் டாயல் என்னும் பிரபல ஆசிரியர் கூறுகிருர். மக்கள் வாழ்க்கைக்கு இந்த மூன்றையும்விட அவசியமான பொருள் வேறெது ?

* * * *

" ஆண்டவனே ! மக்கள் தங்கள் மதியென்னும் மாணிக்கத்தைத் திருடக்கூடிய பகைவனைத் தங்கள் வாயில் விட்டுக்கொள்கிருர்களே ! இதென்ன விந்தை ? சந்தோஷ ஆரவாரத்துடன், களியாட்டங்களுக்கு மத்தியில் மக்கள் தங்களை விலங்குகளாகச் செய்துகொள்வது என்ன அதிசயம் ?

—ஷேக்ஸ்பியர் (ஆங்கில மகா கவி)

* * * *

தெலுங்க நாட்டில் நெல்லூர் ஜில்லாவில் கம்ப பாளையம் கிராமத்தில் திருபுராம் என்ற பெயர் கொண்ட 70-வயதுக் கிழவன் குடிவெறி மிகுதியால் 60-வது சென்ற தனது மனைவியுடன் போராடியதில் அவள் கழுத்தை ஓர் அரி வாளால் வெட்டிக் கொன்று விட்டான். பின்னர் அவன் ஒரு மரத்தில் ஏறிக் கழுத்தில் சுருக்குப் போட்டுக் கொண்டு தற்கொலை செய்ய முயன்ருன். அண்டையி லுள்ளவர்கள் கயிற்றை அறுத்து விட்டார்கள். பின், கிழவன் ஒரு பாழுங் கிணற்றில் குதித்தான். அதில் தண்ணீர் இல்லாததால் அவனுக்குக் காயம் ஏற்பட்டதே யன்றி உயிர் போகவில்லை. அப்பால் போலீசார் வந்து அவனைக் கைது செய்து் போட்லக்கூர் வைத்திய சாலைக்கு அனுப்பி யிருக்கிருர்கள்.

—" லோகோபகாரி."

# மதுவிலக்குப் போர்

1. மதுவிலக்குத் தொண்டர், தமது தாலூகாவிலுள்ள நகரங்களிலும், கிராமங்களிலும் மதுவிலக்குச் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டும். மதுபானத்தை ஒழிப்பதிலும், பூரண மதுவிலக்குச் சட்டம் ஏற்படுவதிலும் அனுதாபங் கொண்டவர்கள் அனைவரும் மேற்படி சங்கங்களில் அங்கத்தினராகச் சேரலாம். இவ்விதம் ஸ்தாபிக்கப்பட்ட சங்கங்கள் தங்கள் தங்கள் நிலைமையை யனுசரித்து சந்தா விகிதம் ஏற்படுத்திக் கொள்ளலாம். ஷை சந்தா அந்தந்த சபையின் செலவுக்கே உபயோகிக்கப்பட வேண்டியது. சந்தாவே இல்லாமலு மிருக்கலாம்.

2. மேற்கூறிய மதுவிலக்குச் சங்கம் ஒவ்வொன்றின் கீழும் தொண்டர் படை ஒன்று அமைக்க முயலவேண்டும். மதுவிலக்குப் போராட்டத்தில் ஊக்கத்துடன் உழைப்பதற்கு முன் வரும் ஸ்திரீ புருஷர்களை இத்தொண்டர் படையில் சேர்க்க வேண்டும். இவர்கள் சாத்வீகமான முறைகளையே பின்பற்ற வேண்டும். கலகம், பலாத்காரம் இவைகளைக் கைக்கொள்ளக் கூடாது.

3. அவ்வப்போது தகுந்த கொடிகளுடனும், பாட்டுகளுடனும், ஊர் வலங்களும், பொதுக் கூட்டங்களும் நடத்தி வைக்க வேண்டும். அக்கூட்டங்களில் மதுபானத்தினால் விளையும் கேட்டைப் பற்றியும், மது விலக்குச் சட்டத்தின் அவசியத்தைப் பற்றியும் கள்ளு, சாராயக் கடைகளை மூடிவிடவேண்டுமென்றும் எடுத்துப்பேசி ஜனங்களுடைய அபிப்பிராயத்தை பலப்படுத்தவேண்டும்.

4. மதுவிலக்குச் சங்கங்களும் மதுவிலக்குத் தொண்டர்களும் மேற்கூறியபடி கூட்டங்களை நடத்துவதோடு, கிராமங் கிராமமாகவும், வீடு வீடாகவும் சென்று குடிப்பழக்கத்தை ஒழிக்கவும், கள், சாராயக்கடைகளைத் தொலைக்கும் கிளர்ச்சியை பலப்படுத்தவும் தீவிர முயற்சி எடுக்கவேண்டும்.

5. ஜனங்களை மதுபானத்திலிருந்து விடுவிப்பதற்காக மாலை நேரங்களில் பஜனை, ஆட்டம், பாட்டு, கூத்து முதலிய நல்ல துறைகளில் அவர்கள் மனம் செல்லுமாறு வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க முயலவேண்டும்.

6. ஜனங்களிடமிருந்து கள், சாராயம் முதலிய லாகிரிப்பொருள்களைத் தொடுவதில்லையென்று சத்தியப் பிரமாணம் வாங்கவேண்டும்.

7. ஜாதிப் பெரியதனக்காரர் முதலியவர்களுடன் கலந்து கள்ளைத் தீண்டாமலிருக்க கட்டுமானங்கள் ஏற்பாடு செய்ய முயலவேண்டும்.

8. கள்ளுக்கடை மறியல் செய்வதால் பயனுண்டாகும் என்று தோன்றும் இடங்களில் சாத்வீக முறையில் மறியல் நடத்தலாம்.

9. மிராசுதார்களும் குத்தகைக்காரர்களும் கள்ளுக்கு மரம் விடாதிருக்குமாறு முயற்சி செய்யவேண்டும்.

10. கள்ளு, சாராயம், அபினி முதலியவை விற்கும் கடைகளை யோக்கியர்கள் எவரும் ஏலத்தில் எடுக்கா வண்ணம் பிரசாரம் செய்யவேண்டும்.

11. கடைகள் தொலைந்து பூரண மதுவிலக்குச் சட்டம் ஏற்படுத்துவதே மதுபானத்தை ஒழிக்க வழி யாதலால் அதற்குத் தீவிர கிளர்ச்சி செய்ய வேண்டும். பூரண மதுவிலக்கை ஆதரிக்கும் ஜனங்களிடம் மதுவிலக்கு உறுதி மொழிப் புத்தகங்களில் கையொப்பம் வாங்கவேண்டும்.

மதுபானத்தினின்று நாட்டை விடுவிக்கும் கிளர்ச்சியைப் பலப் படுத்து[illegible] நமது நோக்கமாதலால் வெறுமே கையெழுத்து வாங்கிவிடுவது மட்டும் போ[illegible] நன்கு விவரத்தை எடுத்துச் சொல்லி ஆண் பெண் இருபாலாரிடமும் கையெ[illegible] அல்லது கை நாட்டு வாங்க வேண்டும்.

Regd. No. M. 2519.

# மது விலக்குப் புத்தகங்கள்

---

## குடிகெடுக்கும் கள்

[பொருளடக்கம் :—குழந்தைகள் பேச்சு, தலைகீழ் நியாயம், பானைக்கும் சோவுக்கும் சம்பாஷணை, கள் வந்த கதை, கலால் வருமானம், விடுதலைப் பாட்டு.]

விலை அணா 1.

---

## திக்கற்ற பார்வதி

(இது கட்குடியால் வரும் கேட்டைக் காட்டும் ஒரு கதை)

விலை அணா 2.

கிடைக்குமிடம் :

எல்லாக் காதி வஸ்திராலயங்களும்,

அல்லது

காரியதரிசி, காந்தி ஆசிரமம்,

திருச்செங்கோடு.

ன்னை ஹிந்தி பிரசார அச்சுக்கூடத்தில் அச்சிடப்பெற்று, சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியாரால் வெளியிடப்பட்டது.